# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2031 மார்கழி 13 வியாழக்கிழமை (28-12-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:32


## மண்ணெண்ணெய், டீசல் உட்பட எரிபொருள்கள் விலை உயர்வு!

கொழும்பு,டிசெ.28

பெற்றோலிய எரிபொருள்களின் விலை நேற்று நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதன்படி மண்ணெண்ணெயின் விலை லீற்றர் 17 ரூபா 40 சதத்திலிருந்து 18 ரூபா 40 சதமாக ஒரு ரூபாவாலும் டீசலின் விலை லீற்றருக்கு மூன்று ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

விலை மீளாய்வுக்கு அமைய 'லங்கா ஓட்டோ' டீசலின் விலை 21 ரூபா 50 சதத்திலிருந்து 24ரூபா50 சதமாகவும், 'லங்கா சுப்பர் டீசலின் விலை லீற்றர் 26ரூபா 80சதத்திலிருந்து 29 ரூபா 80சதமாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

லங்கா கைத்தொழில், எண்ணெய் கைத்தொழில் துறைகளுக்கான மண்ணெண்ணெய் விலை லீற்றர் 19ரூபா 70 சதத்திலிருந்து 20ரூபா 70சதமாக விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை-

'ஷெல்'எரிவாயு நிறுவனத்தின் அறிவித்தலின்படி வீட்டுப்பாவனைக்கான 12.5 கிலோ எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலை இன்று முதல் 8.3 சத வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி சிலிண்டர் ஒன்றின் விலை 470 ரூபாவிலிருந்து 509 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த நிறுவனம் விடுத்த அறிக்கையில் -

வர்த்தக நோக்கங்களுக்கான பாரிய கைத்தொழில்கள் ஆகியவற்றுக்குத் தேவையான எரிவாயு சிலிண்டர்களின் விலைகளில் எந்த மாற்றமும் இல்லை என்று தெரிவித்துள்ளது. (இ-8)

## குடாநாட்டில் நேற்றும் கடும் மழை! தாழ்ந்த பகுதிகளில் வெள்ளம்

### பயன்தரு மரங்கள் முறிந்து வீழ்ந்தன

யாழ்ப்பாணம்,டிசெ.28

யாழ்.குடாவில் கடந்த இரு நாள்களாக பெய்த காற்றுடன் கூடிய மழையினால் பல இடங்களில் பயன்தருமரங்கள் மற்றும் வாழைகள் முறிந்து வீழ்ந்தன. தாழ்ந்த பகுதிகளில் வெள்ளம் புகுந்ததால் குடியிருப்புகள் பாதிக்கப்பட்டன.

கடும் காற்று, மழையினால் நெல்லியடி - கொடிகாமம் வீதியிலுள்ள கரவெட்டி சாமியன் அரசடியில் இரு பனை மரங்கள் வீதிக்குக் குறுக்காக விழுந்ததால் அப்பாதையூடான போக்குவரத்து நேற்றுத் தடைப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு வீசிய கடும் காற்றினால் நீர்வேலி, கோப்பாய், உரும்பிராய், ஊரெழு, சிறுப்பிட்டி, புத்தூர் உட்பட பல இடங்களில் வாழை மரங்கள் முறிந்தன.

சில பிரதேசங்களில் வாழை மரங்கள் குலையுடன் வீழ்ந்து வாழைச் செய்கை முற்றாக அழிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நெல்லியடி பிரதான வீதியில் இராணுவத்தினரால் உயரத்தில் அமைக்கப்பட்டிருந்த காவலரண் ஒன்றும் விழுந்தது.

பல இடங்களில் மின்கம்பங்கள் வீழ்ந்து மின்சாரக் கம்பிகள் அறுந்துள்ளன. வீதிகளில் மரங்கள் வீழ்ந்திருந்தமையால் நேற்று சில இடங்களில் போக்குவரத்துக்கள் தடைப்பட்டது.

இதேவேளை - யாழ்ப்பாணத்தில் நேற்றும் சீரற்ற காலநிலை காணப்பட்டது. வானம் மப்பும் மந்தாரமுமாகக் காணப்பட்டதுடன் மழை விட்டு விட்டு தொடர்ந்து பெய்து கொண்டிருந்தது.

(இ-5-15-17-51-117-185-173)

## தமிழ்நாட்டில் சூறாவளி அபாயம்!

சென்னை டிசெ.28

இலங்கையின் வடகிழக்குப் பகுதிகளைத் தாக்கிய சூறாவளி தற்பொழுது நகர்ந்து வங்காள விரிகுடாவில் நிலை கொண்டிருப்பதாக இந்திய வானிலை அவதான நிலையம் நேற்றிரவு தெரிவித்தது. பாம்பனுக்குத் தென்கிழக்கே 125 மைல் தொலைவில் தற்போது நிலை கொண்டுள்ள தாழமுக்கம் கரையைக் கடக்கும் வேளையில் பாம்பன், நாகபட்டினம், தூத்துக்குடி ஆகிய பகுதிகளைச் சூறாவளி தாக்கலாம் என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையைத் தாக்கியதை விட உக்கிரமடைந்துள்ள இந்தச் சூறாவளி தற்போது மணிக்கு 140 மைல் முதல் 160 மைல் வேகத்தில் வீசுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதேசமயம் சூறாவளி இலங்கையைத் தாக்கும் அபாயம் நீங்கிவிட்டதாக இலங்கை வானிலை அவதான நிலையம் தெரிவித்தது.

(இ-8)

## பயணிகள் மற்றும் நோயாளர் கப்பல்கள்:

# காங்கேசன் துறைமுகத்தைப் பயன்படுத்தப் புலிகள் இணக்கம்

## அடுத்த வாரம் முதல் சேவை ஆரம்பம்

**யாழ்ப்பாணம்,டிசெம்பர்28**

**செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வழித்துணையுடனான நோயாளர் மற்றும் பயணிகள் சேவையில் ஈடுபடும் கப்பல்கள் பயணிகளை ஏற்றி இறக்கும் பணிகளை அடுத்த வாரம் முதல் காங்கேசன்துறையில் மேற்கொள்ளவிருக்கின்றன.**

**செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரி ஒருவர் இத்தகவலை வெளியிட்டார்.**

நோயாளர் சேவையில் ஈடுபடும் 'ஜயா கோஸ்ட்' கப்பலும் பயணிகள் சேவையில் ஈடுபடும் 'சிற்றி ஒவ் ரிங்கோ' கப்பலும் பயணிகளை ஏற்றி இறக்கும் பணிகளை பருத்தித்துறையில் மேற்கொள்வதற்கு முன்னர் இணக்கம் காணப்பட்டு பருத்தித்துறைத் துறைமுகமே பயன்படுத்தப்பட்டு வந்தது.

ஆனால் சமீப காலமாக காலநிலை சீரில்லாத காரணத்தால் பருத்தித்துறைத் துறைமுகத்தைப் பயன்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டது. இதனால் இந்தப்பணிகளை

(12ஆம் பக்கம் பார்க்க)

### பயணத் திகதியை உறுதிசெய்யுமாறு அறிவுறுத்து

எதிர்வரும் முதலாம், இரண்டாம் திகதிகளில் விமானம் மூலம் செல்வதற்கு பதிவுகளை மேற்கொண்டவர்களை இன்று காலை 9 மணிக்கும் 12 மணிக்கும் இடையில் யாழ்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் பலி

யாழ்ப்பாணம்,டிசெ.28

கொக்குவில் கிழக்குப் பகுதியில் நேற்று மின்கம்பி அறுந்து விழுந்தபோது அதில் சிக்குண்ட குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று வீசிய கடும் காற்றால் தென்னை மரம் ஒன்று முறிந்து மின் கம்பிகளின் மீது வீழ்ந்தது என்றும் மின்கம்பிகள் அறுந்து நிலத்தில் வீழ்ந்த போது அதில் சிக்கியே அவர் உயிரிழந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பால் வியாபாரியான சிவஞானசுந்தரம் குகனேஸ்வரன் (வயது 36- நாகலிங்கம் வீதி, கொக்குவில் கிழக்கு)' என்ற இரு குழந்தைகளின் தந்தையே உயிரிழந்தவர் ஆவார்.

ஒருமணி நேரமாக வீதியில் கிடந்த இவரது சடலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பிரேத பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (இ-6-17)

## நேற்றும் விமானச் சேவைகள் ரத்து!

யாழ்ப்பாணம்,டிசெ.28

இரண்டாவது நாளாக நேற்றும் விமானச்சேவை இடம்பெறாததால் யாழ்ப்பாணத்தில் இருந்து பலாலிக்கு அழைத்துச் செல்லப்பட்ட பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

நேற்றுக் காலை முதல் மூன்று சேவைகளுக்கான பயணிகளும் பஸ்கள் மூலம் பலாலிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

சோதனைகள் யாவும் முடிவடைந்து பயணிகள் அங்கு காத்திருக்க, பிற்பகல் அளவில் சேவை ரத்துச் செய்யப்பட்ட அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அதன் பின்னர் பயணிகள் அழைத்து வரப்பட்டு யாழ்.பஸ் நிலையத்தில் இறக்கப்பட்டனர்.

இன்றும் மூன்று சேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்றும் -

நேற்றுப் பலாலிக்குச் சென்று திரும்பியவர்கள் இன்று அழைத்துச் செல்லப்படுவர் என்றும் - யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது. (இ-3-5-173)

## கப்பல் சேவையை ஆரம்பிக்குமாறு அமைச்சர் டக்ளஸ் கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.28

யாழ்ப்பாணத்திலும், திருகோணமலையிலும் காத்திருக்கும் பயணிகளை ஏற்றிவர 'லங்கா முடித்த' கப்பலைச் சேவையில் ஈடுபடுத்துமாறு வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு மற்றும் தமிழ் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பாதுகாப்பு அமைச்சைக் கோரியுள்ளார்.

'சிற்றி ஓவ் ரிங்கோ'கப்பல் சேவை தடைப்பட்டதனால பயணம் மேற்கொள்ள முடியாது யாழ்ப்பாணத்திலும் திருகோணமலையிலும் காத்திருக்கும் பயணிகள் விடுத்த கோரிக்கையை அடுத்து அமைச்சர் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார் என்று ஈ.பி.டி.பி. தெரிவித்துள்ளது.

(இ-3)

## வெள்ள நிலைமையைப் பார்வையிட

## புலிகள் அனுமதி வழங்கினால் வன்னி செல்வதற்குத் தயார்!

### சமூக சேவைகள் அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.28

விடுதலைப் புலிகள் அனுமதி வழங்கினால் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் உதவியுடன் வன்னி சென்று வெள்ள நிலைமையைப் பார்வையிட்டு நிவாரணம் வழங்குவேன்.

இப்படி சமூக சேவைகள் அமைச்சர் மில்றோய் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நேற்றிரவு இடம்பெற்ற செய்தியாளர் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

"முல்லைத்தீவு, வவுனியா போன்ற பகுதிகளில் வெள்ள அனர்த்தங்களால் மக்கள் பாதிக்கப்பட்டதாகத் தகவல் வந்துள்ளது. அங்கு சென்று நிலைவரத்தைப் பார்வையிட்டு நிவாரணம் வழங்கத் தயாராக இருக்கிறேன்.

"விடுதலைப்புலிகள் அனுமதி அளித்தால் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் அங்கு செல்வேன்".

இப்படி அவர் சொன்னார்.(இ-3)

## வெளிமாவட்டம் செல்வோருக்கு புதிய நடைமுறைகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.28

குடாநாட்டில் இருந்து வெளிமாவட்டங்களுக்கு கப்பல் மற்றும் விமானம் மூலம் பயணம் செய்வோர் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்த விவரங்களை வடக்குப் புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபை வெளியிட்டுள்ளது.

பயணச்சீட்டு வழங்கும் பணிகள் புதிய நிர்வாகத்தின்கீழ் புதிய நடைமுறைகளுடன் இடம்பெறவுள்ளன என்று அதிகார சபையின் தலைவர் அறிவித்துள்ளார்.

இதுவரை பயணச்சீட்டு வழங்குவதில் முறைகேடுகள் இடம்பெற்று வருவதாக வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு விடுக்கப்பட்ட முறைப்பீட்டினை அடுத்து பயணச்சீட்டு வழங்குவதில் புதிய நிர்வாகம் அமைக்கப்பட்டுள்ளதுடன் புதிய நடைமுறைகளும் அமுல் படுத்தப்படவுள்ளன என்று அவர் மேலும் சொன்னார்.

பயணச்சீட்டு வழங்குவதற்கான புதிய அலுவலகம் ஸ்ரான்லி வீதி, சிறாம்பியடியில் உள்ள மணியம் கட்டடத்தில் இயங்கவிருக்கிறது.

(11ஆம் பக்கம் பார்க்க)

# கொக்குவில் - தீவக லயன்ஸ் கழகங்கள் இணைந்து நடத்தும்

We Serve

## வைத்திய முகாமும் புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலையை இரவு/பகல் இயங்கச் செய்தலுக்கான ஆலோசனை

**காலம்**: இன்று (28-12-2000) வியாழக்கிழமை.
**நேரம்**: காலை 9.00 மணி- பி.பகல் 2.00 மணிவரை
**இடம்**: நயினாதீவு மகா வித்தியாலயம், நயினாதீவு.

**கண் பரிசோதனை:**
எஸ்.எம். பெர்னாண்டோ ஸ்தாபனத்தாரினால் கண் பரிசோதிக்கப்பட்டு கொக்குவில் லயன்ஸ் கழகத்தினால் வறுமைக் கோட்டிற்குக் கீழ்ப்பட்டவருக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடி அன்றைய தினமே வழங்கப்படவுள்ளது.

**பொது மருத்துவ பரிசோதனை:**
லயன்ஸ் கழக வைத்தியரினாலும், மருத்துவ பீட மாணவர்களினாலும் பரிசோதிக்கப்பட்டு இலவசமாக ஆங்கில மருந்து விநியோகம் செய்யப்படும்.

குறிப்பு: கொக்குவில் தீவக லயன்ஸ் கழக உறுப்பினர்கள் காலை 7.00 மணிக்கு யாழ். மருந்தகம் (WESCO) முன்பாக ஒன்று கூடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

செயலாளர்,
கொக்குவில் லயன்ஸ் கழகம்.

விளம்பர அன்பளிப்பு:-

| | |
|---|---|
| அம்பிகை களஞ்சியம் 304 (110), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். | பகலோன் களஞ்சியம் 334, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். |
| யாழ்ப்பாண வணிக நிலையம் 302 (108), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். | கரசன் எலக்றிக்கல்ஸ், இல.(4) 14, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (82182) |


## யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றிய வளர்ச்சி நிதிக்காக கலைப்பீட மாணவர்கள் வழங்கும்

## நாடக ஆற்றுகைகள்

1. மாயவலை 2. பச்சோந்தி (நாடகங்கள்)
3. நடன நிகழ்வு

## நாம் எங்கு நிற்கின்றோம்......?

காலம் : 30.12.2000 சனிக்கிழமை
நேரம் : காலை 9.30. மாலை 2.30
இடம் : கைலாசபதி கலையரங்கம், யாழ். பல்கலைக்கழகம்

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

கலைப்பீட மாணவர் ஒன்றியம்,
யாழ். பல்கலைக்கழகம்.

விளம்பர அன்பளிப்பு:

**WINTOR SPOT COMMUNICATIONS**
226, Sir Pon. Ramanathan Road,
Thirunelvely, Jaffna

குறைந்த செலவில் நிறைந்த சேவை
காலை 6.00-8.00 மணி வரையும், மாலை 6.00 மணியின் பின்னரும் உள்நாட்டுத் தொலைபேசி அழைப்பிற்கு ரூபா 5/= (1 நிமிடத்துக்கு) மட்டும். காலை 8.00 - 6.00 வரை நிமிடத்துக்கு ரூபா 8/= மட்டும். (82192)

## கொக்குவிலில் இலவச திருமணப்பதிவு

யாழ்ப்பாணம்,டிசெ.28
கொக்குவில் கிழக்கு காளி கோவிலடிப் பகுதியில் திருமணப் பதிவு செய்து கொள்ளாத பத்துத் தம்பதிகளுக்கு கடந்த 23 ஆம் திகதி திருமணப்பதிவு மேற்கொள்ளப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக சமுதாய மருத்துவத்துறை மாணவர்களின் முயற்சியால் மேலதிக மாவட்டப் பதிவாளர் என்.சதாசிவஐயரின் அனுமதியுடன் பதில் விவாகப் பதிவாளர் திருமதி சிவாஜினி செல்லத்துரை இந்தப் பத்துத் தம்பதிகளுக்கும் இலவசமாகத் திருமணப் பதிவை மேற்கொண்டார். (ஐ)

## பாம்பு தீண்டியது

வயலில் வேலை செய்துகொண்டிருந்த இளைஞர் ஒருவர் பாம்பு தீண்டி ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மாலுசந்தி பருத்தித்துறையைச் சேர்ந்த தம்பிமுத்து பகீரதன் (வயது 20) என்ற இளைஞரையே பாம்பு தீண்டியதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-6)

**SHAMROCK**
(இல. 29/3, யா/சோமசுந்தரம் அவன்யூ)
**A/L 2003**
கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகள்
ஆரம்பம்:-
3rd Jan.- Wed. 3 p.m
நேர அட்டவணையைப் பெறவும்
Gr. 6 முதல் O/L வரை
Gr. 5 புலமைப்பரிசில்
(C/14488)

**லக்ஷ்மி சினிமா**
இணுவில்
விஜய், சிம்ரன் நடித்த
**துள்ளாத மனமும் துள்ளும்**
(தினம்) காட்சிகள் 10.30, 2.30 (ப.ந.)

**நாகம்ஸ் சுன்னாகம்**
விஜய்,ஜோதிகா நடிக்க்
S.J.சூர்யாவின்
**குஷி**
தினசரி - 11.00, 2.30 (ப.ந.)
29.12.2000 முதல்
நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த
**TITANIC**
(தமிழ்)
(82197)

**ராஜா யாழ்ப்பாணம்**
விஜய், மோனிக்கா, ரம்பா, மணிவண்ணன்
மற்றும் பலரின்
வித்தியாசமான நடிப்பில்
**மின்சாரக்கண்ணா**
காட்சிகள்: 10.30, 2.00 (ப.ந.)
(C/14547)

## இடமாற்றக் கடிதங்களைப் பெறக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.28
யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட வலிகாமம்,தென்மராட்சி, வடமராட்சி, தீவக வலயங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கான இடமாற்ற உத்தரவுக் கடிதங்களை உடனடியாக நல்லூர் செம்மணி வீதியில் அமைந்துள்ள யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தில் குறித்த ஆசிரியர்களை வந்து பெற்றுக் கொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ம-8)

**லாலா பாராட்டி மகிழ்கிறார்**



**பொ.தியாகராசா**
**(B.Sc.(SPl) C eylon, M.Sc. London)**

லாலா சோப் உரிமையாளராகிய எனது நீண்டகால அன்புக்கும் மதிப்புக்கும் உரியவரான பொ.தியாகராசா அவர்கள் பரந்தன் இரசாயனக் கொம்பனி லிமிட்டெட் நிறுவனப் புதிய தலைவராக நியமனம் பெற்றுள்ளார்.
இவரை வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு, புனர் நிர்மாணம் மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரத்துக்குப் பொறுப்பான
**அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களின் கடுமையான விடாமுயற்சியால்
**மதிப்புக்குரிய ஜனாதிபதி**
அவர்களால் இப்பதவி வழங்கப்பட்டது
நெருக்கடியான இந்தக் காலகட்டத்திலும் இப்பதவி வழங்கப்பட்டது எமது தமிழ் மக்கள் மத்தியில் மிகவும் வரப்பிரசாதம் ஆகும். இவரது சேவை மேன்மேலும் சிறக்க உளமார வாழ்த்துகின்றோம்.

அச்சுவேலி

**உரிமையாளர்,**
**லாலா சோப் தொழிற்சாலை**
(C/14504)

## உடற்கல்வி மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல்

உடற்கல்வி டிப்ளோமா முதலாம் அணி மாணவர்களுக்கான வேலைவாய்ப்பு தொடர்பான அவசர கலந்துரையாடல் நாளை (29-12-2000) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு உடற்கல்வி விரிவுரை மண்டபத்தில் நடைபெறும். அனைத்து மாணவர்களும் தவறாது சமுகம் தரவும்.

மாணவ பிரதிநிதி
முதலாம் அணி.
(82186)

## பொதுக் கூட்ட அறிவித்தல்

நாளை (29.12.2000) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு அனைத்துப் பீட மாணவர்களுக்குமான கூட்டம் இடம்பெறவுள்ளதால் அனைத்துப் பீட மாணவர்களையும் தவறாது சமுகம் தருமாறு எமது ஒன்றியம் கேட்டுக் கொள்கின்றது.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்,
யாழ். பல்கலைக்கழகம்.
(82189)

## நகராட்சி மன்றம் பருத்தித்துறை வரவு செலவுத் திட்டம்

(255 ஆம் அத்தியாயயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 1979 ஆம் ஆண்டின் 13ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 178 (3) ஆம் பிரிவின் பிரகாரம் இச்சபையால் அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட 2001 ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டம் இச்சபையில் 29.12.2000 ஆம் திகதி தொடக்கம் ஏழு (7) நாள்களுக்கு அலுவலக நேரங்களில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அ.வின்சன் கெனடி J.P.U.M
தலைவர்,
நகராட்சி மன்றம்,
பருத்தித்துறை.

நகராட்சி மன்ற அலுவலகம்,
பருத்தித்துறை.
27.12.2000

MOBILE NET MCS COMPUTER SERVICES

## இலவச கணனிப் பயிற்சித் திட்டம்

324, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச திணைக்களங்களை கணனி மயப் படுத்துவதில் பெரும் பங்காற்றிய எமது நிறுவனத்தினர் 2001 ஆம் ஆண்டில் இலவச பயிற்சித் திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளார்கள். இப்பயிற்சி நெறியில் இணைந்து கொள்ளும் மாணவர்கள் 31.12.2K ற்கு முன்பாகத் தமது பதிவுகளை மேற்கொள்ளவும். (C/14503)

# உதயன்

## புதுவருடத்தோடேனும் போர் நிறுத்தம்

சமாதான தீபம் அணையாது ஏற்றப்பட்டு இந்தத் தேசத்தை கட்டியெழுப்ப இன்றைய நன்னாளில் நம் அனைவரும் ஒன்றுபட்டு உறுதி பூண வேண்டும்.

நாம் எதிர்பார்க்கும் சமாதானம் மற்றும் சௌஜன்ய சக வாழ்வை ஏற்படுத்திக் கொள்ளும் உன்னதமான எதிர்பார்ப்பு நிறைவேறும் யதார்த்தமான சூழ்நிலையை நெருங்கிக் கொண்டிருக்கிறோம்.

கடந்த பல தசாப்தங்களாக எமது வளங்களையும் மானிட விழுமியங்களையும் அழித்து நாசமாக்கும் போரினால் நாம் மிகவும் சலிப்படைந்துள்ளோம்.

யுத்தம் மிகக் கொடூரமானது. அதனால்அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளனர். அந்தக் கொடிய போரை முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டில் நிலையான அமைதியை ஏற்படுத்த அரசாங்கம் உறுதியுடன்செயற்படுகிறது.

இன்றைய தினத்தில் நாம் பணமபடுள்ள சமுதாயமாக ஏனைய சமூகத்தவர்களின் உரிமைகளுக்கும் கலாசாரத்திற்கும் மதிப்பளிக்க வேண்டும்.

ஜனாதிபதி சந்திரிகா, நத்தாரை ஒட்டி விடுத்த செய்தியில் குறிப்பிட்டுள்ளவற்றில் சில வரிகளையே மேலே வாசித்திர்கள்,

எவ்வளவு அருமையான கருத்துக்கள், நிலைப்பாடுகள்; ஒரு நாட்டின் தலைவி இத்தகைய நன்னோக்கம் உடையவராக இருப்பது பெரும் வரவேற்புக்கு உரியதல்லவா என்று வாசிப்பவர்களை யோசிக்கவைக்கும்வரிகள் இவை

ஜனாதிபதியின் நத்தார் செய்தியை வாசிப்பவர்கள் மனதில் இன்னொரு முக்கியமான கேள்வி எழும்.

போர் மிகவும் கொடூரமானது என்கிறார்; அதனால் அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்கிறார். அதுவே அவரது உண்மையான, இதயபூர்வமான, ஆத்மார்த்தமான கருத்தானால்—

விடுதலைப் புலிகள் ஒரு தலைப்படசமாக போர் நிறுத்தத்தை நடைமுறை செய்துள்ள வேளையில், அரச படைகளும் பதிலுக்குப் போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்று இது வரை பணிக்காதது ஏன்?

இதுவே இன்று எல்லோரும் எழுப்பும் கேள்வியாகும்.

தலை இருக்க வால் ஆடுவது போல, ஜனாதிபதி கொழும்பில் இல்லாததாலோ என்னவோ, அரசு போர் நிறுத்தம் செய்வது குறித்து பிரதமர் ஒன்றும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் இன்னொன்றும், படை உயர் அதிகாரிகள் வேறொன்றுமாகக் குழப்பி அடிக்கின்றனர்; இந்த முக்கிய விடயத்தைக் கலக்கிக் கூழாக்குகின்றனர்.

சமாதானத்தையும், சக வாழ்வையும், சகோதரத்துவத்தையும் நிலைநாட்டுவதற்குப் போர் நிறுத்தப்பட வேண்டும்; நீடிக்கப்படக் கூடாது. விடுதலைப்புலிகள் அரச படைகளுக்கு எதிராகத் தாக்குதல்களை நடத்துவதாலேயே தாம் போரை நடத்த நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதாகக் கடந்த பல வருடங்களாகக் கூறிவந்த அரசாங்கம், இப்போது தாம் அதனை நிறுத்தாதது ஏன்?

சமாதானத்துக்கான யதார்த்தம் தெரிவதாக, ஜனாதிபதி கூறுகிறார். போரை நிறுத்தாமல் சமாதான யதார்த்தம் எவ்வாறு உருவாகும்?

நடந்தவை நடந்தனவாக இருக்கட்டும்; இனி நடப்பன வேனும் நல்லவையாக இருக்கட்டும்; நத்தார் செய்தியில் தாம் குறிப்பிட்டுள்ள சமாதானம் வருவதற்கு புத்தாண்டு தினத்திலிருந்தாவது அரச படைகளை போர் நிறுத்தம் செய்யுமாறு ஜனாதிபதி உத்தரவிட வேண்டும்.

# மிருசுவில் படுகொலைச் சம்பவத்துக்கு புளொட் அமைப்பு கடும் கண்டனம்

யாழ்ப்பாணம், டிசெ. 28

மிருசுவில் வடக்கில் பொது மக்கள் கொல்லப்பட்டுப் புதைகுழியில் புதைக்கப்பட்ட சம்பவம்போன்ற சம்பவங்கள் கடந்த காலத்தில் பல இடம் பெற்றுள்ளன. அவற்றில் ஒரு சம்பவம் குறித்தே நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஏனைய சம்பவங்கள் குறித்து நடவடிக்கை எடுக்கப்படாததால் இவை தொடர்ந்து இடம்பெறுகின்றன.

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்) விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மிருசுவில் பகுதியில் தமது வீடுகளைப் பார்வையிடச் சென்று காணாமற்போன 8 பொதுமக்கள் படித்த மகளிர் குடியேற்றத்திட்டத்தில் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். இவர்கள் கொடூரமான முறையில் கொலைசெய்யப்பட்டுள்ளனர் என்பதும் தெரியவருகிறது. இத்தக் கொலைகளைச் செய்தவர்கள் இராணுவத்தினர் என்பதும் இனம் காணப்பட்டுள்ளது. இராணுவத்தின் அனுமதி பெற்றே இவர்கள் தமது வீடுகளைப் பார்க்கச் சென்றுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்தக் கொலைகளை ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி வன்மையாகக் கண்டிக்கிறது.

இது போன்ற படுகொலைகளும், பாலியல் வல்லுறவுச் சம்பவங்களும் கடந்த காலங்களில் நடைபெற்றுள்ளன. இவற்றில் ஒரு சம்பவத்தைத் தவிர ஏனையவை எதுவும் சரியான முறையில் விசாரிக்கப்பட்டு சம்பந்தப்பட்டவர்கள் தண்டிக்கப்படவில்லை அதுவே தொடர்ந்து இராணுவ அட்டூழியங்களுக்கு உந்துசக்தியாக இருந்துள்ளது.

இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண நோர்வே எடுக்கும் முயற்சிகளுக்கும் இது போன்ற சம்பவங்கள் முட்டுக்கட்டையாகவே அமையும். எனவே இராணுவ அட்டூழியங்கள் மேலும் நடைபெறாது இருக்க அரசு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என நாம் அரசைக் கேட்டுக் கொள்கின்றோம் — என்றுள்ளது

(இ-3)

## வீதிகள் திருத்தம்

சாவகச்சேரி, டிசெ. 28

வடமராட்சி தெற்கு-மேற்கு பிரதேச சபையினால் உடுப்பிட்டிப் பகுதியில் உள்ள சேதமடைந்துள்ள பல வீதிகள் திருத்தம் செய்யப்பட உள்ளன.

உடுப்பிட்டி கும்பவாழிப் பிள்ளையார் ஆலய வீதி, உடுப்பிட்டி இலக்கணாவத்தை வீதி என்பவற்றையும் வெள்ளம் பாயும் மதகுகளையும் திருத்தும் ஆரம்ப வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன.

இப் பகுதியில் சில வீதிகள் ஏற்கனவே திருத்தம் செய்யப்பட்டுள்ளன.

இவ் வருட முடிவுக்குள் குறிப்பிட்ட வீதி வேலைகள் முடிக்க வேண்டியுள்ளதால் துரிதமாக வேலைகள் நடைபெற்றுவருகின்றன. (ம-31)

## ஒன்று கூடல்

யாழ். பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தின் வருட இறுதி ஒன்று கூடல் நாளை மறுதினம் சனிக்கிழமைகாலை 1ம மணிக்கு யாழ்ப்பாணம் றக்கா வீதியில் உள்ள தையல் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது. (இ-5)

## நூல் வெளியீடும் கலந்துரையாடலும்

தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் தாயகம் நூல் வெளியீடும் கலந்துரையாடலும் எதிர்வரும் 31 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு ஒன்றிய மண்டபத்தில் செம்பியின் செல்வன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் நூலின் நயப்புரையை பேராசிரியர் இரா. சிவச்சந்திரன், உடுவில் அரவிந்தன் ஆகியோர் நிகழ்த்துவர். பதிலுரையை க. தணிகாசலம் நிகழ்த்துவார். (ம)

# காணி சுவீகரிப்பால் விரக்தியுற்ற விவசாயி நஞ்சருந்தித் தற்கொலை!

## வல்வை ஊரிக் காட்டுப் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், டிசெ. 28

பிரதேச சபையினால் தமது தோட்டக்காணி சுவீகரிக்கப்பட்டதை அடுத்து விரக்தியுற்ற விவசாயி ஒருவர் கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வல்வெட்டித்துறை ஊரிக் காட்டுப் பகுதியில் இடம் பெற்ற இச் சம்பவத்தில் மயில்வாகனம் விக்னேஸ்வரன் (வயது 50) என்ற விவசாயியே மரணமானார்.

கடந்த 5 ஆம் திகதி கிருமிநாசினியை அருந்தியவுடன் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர் மேலதிக சிகிச்சைக்காக அன்றைய தினமே யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டார்.

யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக்குட்படுத்திய நிலையில் 7 நாள்களின்பின் அவர் அங்கு மரணமானார்.

மரண விசாரணையின் போது சாட்சியமளித்த இறந்தவரின் மனைவி வி. பத்மேஸ்வரி (வயது50) தாயார் ம. இரத்தினம்மா (வயது 75) ஆகிய இருவரும் தெரிவித்ததாவது:-

கடந்த 20 நாள்களுக்கு முன் எமது சொந்தக் காணியான 5 பரப்புத் தோட்டக் காணியை வல்வெட்டித்துறை நகரசபை, பொது விளையாட்டு மைதானம் ஒன்றை அமைக்கும் பொருட்டு சுவீகரித்துக் கொண்டது. வேறு தோட்டமோ, வேலையோ அற்ற நிலையில் இருந்த விக்னேஸ்வரன் அக்காணியை சீவியத்தின் பொருட்டு தோட்டம் செய்ய விடும்படி பல தடவை கோரி இருந்தார்.

ஆனால் அதற்குரிய நஷ்டஈடு தரப்படும், காணி திருப்பி ஒப்படைக்கப்பட மாட்டாது என உறுதியானபதில் கிடைத்தது.

இதனால் விரக்தியடைந்த நிலையில் காணப்பட்ட அவர் 5 ஆம் திகதி கிருமிநாசினியை அருந்தி விட்டார். அதற்கான சிகிச்சை பெற்று வருகையில் மரணமானார்— என்று தெரிவித்தனர்.

மரண விசாரணையைமேற்கொண்ட மரண விசாரணை அதிகாரி ரி. ஜெயரத்தினம் விசாரணையின் பின் சடலத்தை மனைவியிடம் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டதை அடுத்து சடலம் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

(ம-15)


## பங்களாதேஷ் விமானப் படைத் தளபதி வருகை

கொழும்பு, டிசெ 28

பங்களாதேஷ் விமானப் படைத் தளபதி எயார் வைஸ் மார்ஷல் ஜம்மல் உஷன் அகமத் ஜனவரி முதலாம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

ஜனவரி 6 ஆம் திகதி வரை அவர் இங்கு தங்கி இருப்பார். ஜனவரி 2 ஆம் திகதி இலங்கை விமானப் படையினர் அவருக்கு அணிவகுப்பு மரியாதை அளிப்பர்.

(ம)



## சாயி சிந்தனை

இளமைப் பருவம் மிகவும் புனிதமானது. கடவுளை உன்மனதில் எப்போதும் இருத்தி, உனது கல்வியைத் தொடர்வாய். வேண்டாத செயல்களிலும் பந்தங்களிலும் சிக்கிக் கொள்ளாதே. அவை உனக்கு அமைதியின்மையைத் தரும். இக்காலத்தில் மக்கள் அமைதியைத் தேடுகிறார்கள். ஆனால் அமைதியை (peace) வெளியுலகத்தில் காண இயலாது, வெளியில் நீங்கள் துன்பங்களை (pieces) த்தான் காணமுடியும். அமைதி உனக்குள்ளே இருக்கிறது. நீயே அமைதியின் வடிவம். நீயே சத்தியத்தின் வடிவம். நீயே அன்பின் (பிரேமையின்) வடிவம். முதலில் உன்னையே அறிந்து கொள். பிறகு தான் நீ எப்போதும் ஆனந்தமாக இருக்க இயலும்.

(சனாதனசாரதி ஏப்ரல் 2000)

## நாளை

மார்கழி 14

வெள்ளிக்கிழமை

திதி: சதுர்த்தி (முழு நாளும்)

நட்சத்திரம்: திருவோணம்

பிற்பகல் 12. 41 வரை.

சதுர்த்தி விரதம்

அமிர்தநேரம்: 06 29-07.59

ராகுகாலம்: 10 59-12.59

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## செயலமர்வு

தென்மராட்சி, டிசெ. 28

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 11,8 வகுப்புகளில் விஞ்ஞானம், சமூகக்கல்வி ஆகிய பாடங்கள் கற்பிக்கவுள்ள ஆசிரியர்களுக்கும் தரம்2 இல் கற்பிக்கவுள்ள ஆசிரியர்களுக்குமான புதிய கல்விச்சீர்திருத்தசெயலமர்வுகள் நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

பாடசாலைகளில் மேற்படி பாடங்களை தரம் 8,11களில் கற்பிக்கவுள்ள ஆசிரியர்களை மட்டும் செயலமர்வில் பங்குபற்றுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார்.

(ம-117)

# தென்மராட்சி வலயத்தில் 14 ஆசிரியர்கள் நியமனம்

தென்மராட்சி, டிசெ. 28

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு பதினான்கு ஆசிரியர்கள் நியமனம் பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இயங்கும் வலய அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும் என வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா தெரிவித்தார்.

டிசெம்பர் முதலாம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

புதிதாக ஆசிரிய நியமனம் பெற்றவர்களின் பெயர் விபரங்களும் நியமனம் வழங்கப்பட்ட பாடசாலைகளின் விபரங்களும் வருமாறு.

★ ஆரம்பக்கல்வி

திருஞானம் நவநீதன் — (கொடிகாமம் திருநாவுக்கரசு ம. வி), சந்திரசேகரன் ஜமுனா — (உசன் இராமநாதன் ம. வி), யோகதாஸன் ஜெனிதலதனி — (சாவ. இந்து ஆரம்பப் பாடசாலை), இராமுப்பிள்ளை அம்பிகை — (கைதடி கலைவாணி வித்தி.).

★ விவசாயம்

வெலாயுதம் ஸ்ரீதா — (சாவ. டிறிபேர்க் கல்லூரி).

★ ஆங்கிலம்

சதாசிவமூர்த்தி குணாளினி — (கொடிகாமம் திருநாவுக்கரசு ம. வி.), சிவராசலிங்கம் சிவஞானவதனா (சாவ இந்துக் கல்லூரி). சோமசுந்தரம் அருள்மொழி—(சாவ இந்துக் கல்லூரி), துரைரத்தினம் சிவசுதனா —(சாவ. இந்துக் கல்லூரி), அருணாசலம் மேரானினி — (சாவ டிறிபேக் கல்லூரி), அருணந்தி கௌசலா—(மீசாலை வீரசிங்கம் ம. வி), பாஸ்கரலிங்கம் கௌரி—(இடைக்குறிச்சி சிவசுப்பிரமணிய வித்தி.), தர்மலிங்கம் கமலகளா—விடத்தற்பளை கமலாசனி வித்தி) சதாசிவசர்மா கீதநந்தினி— மட்டுவில் ம. வி).

(ம-11)

## உதயவாக்கு

பிறரின் வாயை அடைப்பவன் முதலில் தன் வாயைக் கட்ட வேண்டும்.

—டென்மார்க் பழமொழி.

# கல்வியியல் கல்லூரிகளுக்கான வெட்டுப் புள்ளிகள் வெளியாகின

யாழ்ப்பாணம், டிசெ. 28
தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கு புதிய கல்வியாண்டின் மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான வெட்டுப் புள்ளிகள் வெளியாகி உள்ளன.

ஜி. சி. ஈ உயர்தரப் பரீட்சையில் பெற்ற மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் பாடத்துறைகளும் ஆண்கள், பெண்களுக்கான வெட்டுப் புள்ளி விவரமும் வருமாறு:-

★ ஆரம்பப் பிரிவு:- ஆண்கள் 252, பெண்கள் 257.
★ முதன் மொழி:- ஆண்கள் 250, பெண்கள் 252.
★ விஞ்ஞானம்:- ஆண்கள் 211, பெண்கள் 226.
★ கிறிஸ்தவம்:- ஆண்கள்- 225, பெண்கள்- 245.
★ சமூகக்கல்வி:- ஆண்கள் 263, பெண்கள்- 259.
★ கணிதம்:-ஆண்கள்18௨, பெண்கள்- 160.
★ விவசாயம்:- ஆண்கள் -234, பெண்கள்- 228.

இருபாலாருக்கும் பொதுவான வெட்டுப் புள்ளிகளின் விவரம்:-

★ இந்துசமயம்:- 255.
★ சித்திரம், சங்கீதம், நடனம்:- 180
★ தொழில் நுட்பப் பாடம்:- 230
★ உடற்கல்வி:- 170 மற்றும் மாவட்ட மாகாண விளையாட்டுத் தகைமைகள்.
★ பெண்களுக்கான மனைப் பொருளியல்;- 221.

இந்தப் புள்ளிகளையும் அவற்றுக்கு அதிகமான புள்ளிகளையும் பெற்றவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப் படவுள்ளனர் என்றும் —

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைக் கடிதங்கள் விரைவில் அனுப்பி வைக்கப்பட்டு ஜனவரி மாதம் 9, 10, 11, 12 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நேர்முகப் பரீட்சைகள் நடைபெறும் என்றும்—

யாழ். கல்வியியல் கல்லூரி உப பீடாதிபதி பா. தனபாலன் தெரிவித்துள்ளார்.

(ம)

## தவறிவிட்டது

காரைநகர் கருங்காலியைச் சேர்ந்த தம்பிராசா பரமேஸ்வரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை, கடற்படை அடையாள அட்டை துண்டு. (இல.006246)என்பன 26-12-2000 அன்று யாழ். சிறைச்சாலைக்கும். பிறவுண் றோட் சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள். இல. 150, பிறவுண் றோட். யாழ்ப்பாணம் எனும் முகவரியில் கொடுத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். 3142, எனும் தொலைபேசி இலக்கத்துடனும் தொடர்பு கொள்ளலாம்.

(82191)

## வரவேற்பு உபசார அழைப்பிதழ் வழங்கல்

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட முதலாம் வருட மாணவர்களுக்கான வரவேற்பு உபசார அழைப்பிதழ் நாளை (29—12—2000) வெள்ளி பிற்பகல் 4. 00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் வழங்கப்படும்.

அனைத்து முதலாம் வருட மாணவர்களும் தவறாது சமுகம் தரவும்.

2 ஆம் வருட கலைப்பீட மாணவர்கள் இன்று 28—12—2000 காலை 10. 00 மணிக்கு கைலாசபதி கலையரங்கின் முன் ஒன்று கூடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**கலைப்பீடம் 2 ஆம் வருட மாணவர்கள்,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

(82163)

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

05 — 12 — 2000 அன்று சிவபதமடைந்த மணியகாரன் வளவு கைதடி கிழக்கைச் சேர்ந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் சின்னத்தம்பி விசுவநாதர்

(விசுவலிங்கம்)
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் மதிய போசனமும் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அன்ன பூரணி மண்டபத்தில் 30 - 12 - 2000 சனிக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறும். மேற்படி நிகழ்வுகளில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்

சுன்னாகம். (82164)

## கண்ணீர் அஞ்சலி

எமது ஆசிரிய கலாசாலை மாணவி
செல்வி க. ரேவதி
( ஆரம்பக் கல்வி முதலாம் வருடம் A )
அவர்களின் அன்புத் தந்தையார்

### தம்பையா கதிரேசு

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

**கலாசாலைச் சமூகம்,**
**ஆசிரிய கலாசாலை,**
கோப்பாய்.

[82180]

## இடர்க்காலக் கொடுப்பனவு

தென்மராட்சி, டிசெ. 28
தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர், கல்விசாரா ஊழியர்கள் ஆகியோருக்கான கடந்த ஜூலை முதலாம் திகதி தொடக்கம் டிசெம்பர் முப்பத்தோராம் திகதி வரையான காலப்பகுதிக்குரிய இடர்க்கால ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் நாளை வெள்ளிக்கிழமை வழங்கப் படவுள்ளன.

அந்தந்தப் . பாடசாலைகளின் அதிபர்கள் வலய அலுவலகத்துக்கு வந்து உரிய காசோலையினைப் பெற்றுக் கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறித்துள்ளார்.

(ம-117)

## திருடப்பட்ட மோ. சைக்கிள் மீட்பு

நெல்லியடி, டிசெ. 28
கடந்த 4 மாதங்களுக்கு முன் வடமராட்சிப் பகுதியில் உள்ள வீடொன்றிலிருந்து திருடப்பட்ட 50 ஆயிரம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிள் ஒன்று, அண்மையில் சுன்னாகத்தில் மீட்கப்பட்டது.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கரணவாய் வடக்கைச் சேர்ந்த கிட்டினன் - செல்வநாதன் என்பவரின் எம். ட. 90 மோட்டார் சைக்கிள் கடந்த செப்ரெம்பர் மாதம் 16 ஆம் திகதி இரவு வீட்டிலிருந்து திருடப்பட்டதாக உரிமையாளரால் வல்வெட்டித்துறைப்பொலிஸ்நிலையத்தில் புகாரிடப்பட்டிருந்தது.

இத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட வல்வெட்டித்துறைப் பொலீஸார் சுன்னாகம் பொலீஸாரின் உதவியுடன். அப்பகுதியிலிருந்து குறித்த மோட்டார் சைக்கிளை மீட்டதுடன் சந்தேகத்தின் பேரில் குடும்பஸ்தர் ஒருவரையும் கைது செய்திருந்தனர்.

குறித்த சந்தேக நபரை சுன்னாகம்பொலீஸார்மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் செய்த சமயம் அவரை இருவார காலம் விளக்க மறியலில் வைக்குமாறு மல்லாகம் மாவட்ட நீதிவான் எஸ். பி. சுப்பிரமணியம் உத்தரவிட்டார்.

(ம-109)

## வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

இம்மாதம் 26 ஆம் திகதி வரை பயண அனுமதி வழங்கப்பட்டோர் விவரம்:-

**சங்கானை**

(163955ஏ), (169946ஏ), (169946பி), (170144ஏ), (170324ஏ), (170324பி), (172902ஏ). (172902பி), (172902சி), (174921ஏ), (174921பி), (175077ஏ), (175206ஏ), (175797ஏ), (175859ஏ), (175937ஏ), (175937பி).

**யாழ்ப்பாணம்**

175656ஏ), (175656பி), (175656சி).

**நல்லூர்**

171639ஏ), (150412ஏ), (150412பி), (150412சி). (150412டி), (150412ஈ), (166666ஏ), (166666பி), (166666சி). (166666டி). (169192ஏ), (169192பி), (170433ஏ), (170434ஏ), (172921ஏ), (172921பி). [172925ஏ], [172925பி], [172925சி], [174604ஏ], [174810ஏ], [174810பி], [174810சி], [174950ஏ], (174950பி), (175025ஏ), (175043ஏ), (175043பி), (175746ஏ), (175746பி). (175779ஏ), (175779பி). (175781ஏ), (175781பி), (175838ஏ), (175911ஏ), (175912ஏ), (175912பி), (177004ஏ), (177004பி), (177004சி), (177004டி).

**சண்டிலிப்பாய்**

(160444ஏ), (160444பி), (160466ஏ), (160466பி), (160466சி), (160466டி), (169435ஏ). (170152ஏ), (170303ஏ), (170303பி), (170336ஏ). (173019ஏ). (173019பி), (173019சி), (173019டி), (173098ஏ). (173098பி), (174870ஏ). (174870பி), (174874ஏ). (174937ஏ), (174990ஏ), (174990பி), (174990சி), (174990டி), (174991ஏ), (174991பி). (175020ஏ). (175131ஏ), (175193ஏ), (175740ஏ). (175741ஏ), (175749பி), (175749சி), (175749டி). (175749ஈ), (175750ஏ). (175815ஏ), (175815பி). (175823ஏ), (175891ஏ), (175891பி), (175968ஏ), (175996ஏ), (176003ஏ), (176003பி). (176003சி), (176530ஏ), (176548ஏ).

**தெல்லிப்பழை**

(153454ஏ). (153454பி), (174929ஏ), (175086ஏ), (175086பி), (175086சி), (175086டி), (175086ஈ), (175775ஏ), (175851ஏ), (175886ஏ), (175887ஏ), (175887பி), (175931ஏ).

**உடுவில்**

(165804ஏ), (169270ஏ), (170065ஏ). (174907ஏ), 174907பி). (174937பி). ((174949ஏ), (174949பி) (175055ஏ), (175717ஏ), (175717பி), (175764ஏ), (175768ஏ), (175790ஏ), (175859பி), (175859சி), (175859டி), (175866ஏ), (175866பி), (175866சி), (175875ஏ), (175900ஏ), (175900பி), (175939ஏ), (175939பி), (176816ஏ)

[ம—6]

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை குமாரசாமி

(இளைப்பாறிய நில அளவை உதவியாளர்)

கருகம்பனை காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், 8 A, பொன்சேகர வீதி, கல்கிசையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை குமாரசாமி கொழும்பில் 26 — 12 — 2000 செவ்வாய்க்கிழமை அன்று அகால மரணமானார்.

அன்னார் சிவனேஸ்வரியின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - செல்லமுத்து தம்பதிகளின் மூத்தமகனும். காலஞ்சென்றவர்களான சிவசம்பு - பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அருமை மருகனும், காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் சண்முகரத்தினம் (நில அளவை மேற்பார்வையாளர், வவுனியா) ஆகியோரின் அன்புச்சகோதரனும், திருமதி புவனேஸ்வரி, சுந்தரலிங்கம், திருமதி தனேஸ்வரி சண்முகரத்தினம் ஆகியோரின் ஆசை மைத்துனரும், ஸ்ரீசாந்தினி (ஜேர்மனி), குமுதினி. வதனி, வயிரவநாதன் (லண்டன்), பாமினி ஆகியோரின் அன்புத் தந்தையும், சத்தியசிலன் (ஜேர்மனி), சண்முகராஜா (உப அதிபர், ரத்மலானை இந்துக்கல்லூரி) ஆகியோரின்மாமனாரும்,மயூரா, உமையாள்,ஜெயராம் ஆகியோரின் பாசமிகு பேரனும், சுகிர்தா, சுனித்தா, சக்சி, வர்ணன் ஆகியோரின் பெரியப்பாவும், முருகையா, நகுலேஸ்வரி, அருணாசலம், சுவாமிநாதன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கல்கிசையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
**திருமதி புவனேஸ்வரி சுந்தரலிங்கம்**
'மிதிலை'
சுதுமலை வடக்கு மானிப்பாய். (82174)

### சிவஞானசுந்தரம் குகனேஸ்வரன்

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும்வசிப்பிடமாகவும் கொண்ட சிவஞானசுந்தரம் குகனேஸ்வரன் நேற்று 27-12-2000 அகால மரணமானார்.

அன்னார் முத்துத்தம்பி சிவஞானசுந்தரம் - பேபி சரோஜா தம்பதிகளின் அன்புப் புதல்வரும், இந்திராணியின் அன்புக் கணவரும், சிவகாமி, குமரகுருபரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற குமரகுருபரன் மற்றும் சிவகாமசுந்தரி (ஜேர்மனி), கல்யாணி (சுவிற்சிலாந்து), றஞ்சினி (ஜேர்மனி), காலஞ்சென்ற குகதாசன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், புவனேஸ்வரன் (ஜேர்மனி). ஞானசேகரம் (சுவிற்சிலாந்து), றஞ்சித் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28-12-2000) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**முத்துத்தம்பி சிவஞானசுந்தரம்**
(தந்தை)
மஞ்சவனப்பதி வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில். (82190)

நூலகம் யாழ்ப்பாணம்

# நிவாரண மீளாய்வுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கோருகிறது ஈ.பி.டி.பி.

யாழ்.மாவட்டத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணப் பொருள்களின் விநியோகத்தில் மீளாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கான ஆய்வு வேலைகளே நடைபெற்று வருகின்றன. இம் முயற்சியினைத் திரிபுபடுத்தி மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணம் நிறுத்தப்படப் போவதாகவும் நிவாரணத்திற்குப் பயன்படுத்தப்படும் நிதி பாதுகாப்பு செலவீனத்திற்குப் பயன்படுத்தப்பட உள்ளதாகவும் வெளிவரும் செய்திகளில் எந்தவித உண்மையுமில்லை. மக்கள் இவை குறித்து அநாவசியமாகக் குழப்பமடையத் தேவையில்லை.

இவ்வாறு ஈ.பி.டி.பி. அமைப்பு ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளது. அதன் விவரம் வருமாறு:-

யாழ்.குடாநாட்டில் வழங்கப்படும் நிவாரணப் பொருள்கள் குறித்து பல முறைப்பாடுகள் எமக்குக் கிடைத்துள்ளன. வழங்கப்படும் நிவாரணப் பொருள்கள் தரக் குறைவாக உள்ளதாகவும், வழங்கப்படும் நிவாரணப் பொருள்களின் அளவு போதியதாக இல்லை எனவும் எம்மிடம் முறையிடப்பட்டுள்ளது.

இவை தவிர நிவாரணம் கிடைக்க வேண்டிய மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படாமலும் உள்ளது. எடுத்துக்காட்டாக பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் சுமார் 1500 தொடக்கம் 2000 பேர் வரையிலான மக்கள் நிவாரணம் பெறத் தகுதியுடையவர்களாக இருந்தும் அவர்களுக்கு இதுவரை நிவாரணம் வழங்கப்படவில்லை என்று எமக்கு முறையீடு செய்யப்பட்டுள்ளது.

ஆனால் நிவாரணம் தேவையற்றவர்களுக்கு நிவாரணம் தொடர்ந்து வழங்கப்பட்டு வருவதாகவும் நிவாரணம் வழங்கலில் சில கிராம அலுவலர்கள் முறைகேடாக நடந்து கொள்வதாகவும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இத்தகைய முறைப்பாடுகளின் அடிப்படையில் நிவாரண வழங்கலில் புதிய நடைமுறை ஒன்றினை- வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் வடக்கு -கிழக்கு தமிழ் விவகார அமைச்சு அமுல்படுத்த விரும்புகின்றது. இந்த மீளாய்வினை அரசு நிவாரணத்தை வெட்ட முனைவதாகப் பிரசாரப்படுத்துவது அரசியல் சுயலாப நோக்கிலானது என்றே ஈ.பி.டி.பி.கருதுகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இயல்பு நிலையை தோற்றுவிக்க ஈ.பி.டி.பி. அமைப்பு போராடி வருகின்றபோதும், மக்களுடைய வாழ்வில் திருப்திகரமான முன்னேற்றங்கள் தென்படவில்லை. போர் தொடர்ந்து நடைபெறுவதால் மக்கள் தொடர்ச்சியாக இடம்பெயர்வு வாழ்வை அனுபவித்து வருகிறார்கள். யுத்த அனர்த்தங்களின் பாதிப்புக்களைத் தொடர்ந்தும் சுமந்து வருகிறார்கள்.

இந்த நிலையில் மக்கள் தமது இயல்பு வாழ்க்கைக்கு முற்றிலும் திரும்பும்வரை நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்பதில் ஈ.பி.டி.பி. அமைப்பு உறுதியாகவே உள்ளது. அதேவேளை நிவாரணப் பொருள்களையே நம்பி நின்று எமது மக்கள் எவற்றுக்கும் கையேந்துகின்ற சமூகமாக மாறிப்போகும் நிலைமைக்கும் எமது அமைப்பு இட்டுச் செல்லாது என்பதை உறுதிபடக் கூறிக்கொள்ள விரும்புகின்றது.

தற்போது வழங்கப்படும் நிவாரணப் பொருள்கள் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஆறு மாதங்களுக்கு மட்டுமே வழங்குவதாக அரசு ஆரம்பத்தில் முடிவெடுத்திருந்தது. ஆனால் ஈ.பி.டி.பி. அமைப்புக்கும் அரசுக்கும் இடையிலான அரசியல் உறவின் அடிப்படையிலும் ஈ.பி.டி.பி. அமைப்பானது அரசுக்குக் கொடுத்து வரும் அழுத்தத்தின் காரணமாகவுமே கடந்த 10 வருடங்களாக தீவு மற்றும் வடக்கு வலிகாமப் பகுதிகளிலும் கடந்த நான்கு வருடங்களாக வலிகாமத்திலும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டு வருகின்றது.

கடந்த காலங்களில் அரசு யாழ். மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணத்தை நிறுத்த முனைந்தபோது அரசுக்கு ஈபிடிபி வழங்கிவரும் ஆதரவினை அரசியல் துரும்பாகப் பயன்படுத்தி, நிவாரணம் தொடர்ந்து வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

எனவே தற்போது நடைபெற்று வரும் முறைகேடுகள் பலவற்றைக் கொண்டுள்ள நிவாரண வழங்கல்களில் மீளாய்வுகளை மேற்கொண்டு பாதிக்கப்பட்ட மக்கள் நியாயமான முறையில் நிவாரணப் பொருள்களை பெற்றுக்கொள்ள அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைக்கும்படி ஈ.பி.டி.பி. அமைப்பு கேட்டுக்கொள்கின்றது. (ம)

## சுயதொழில் கடன் உதவி

சண்டிலிப்பாய்,டிசெ.28

யாழ்.சமூக அபிவிருத்தி மன்றம் கிராம ரீதியாக இயங்கிவரும் மன்ற சேமிப்புக் கழகங்களின் உறுப்பினர்களுக்கு சுயதொழில் முயற்சிக்கான கடனை வழங்கி வருகின்றன. தையல், விவசாயம், கோழி வளர்ப்பு, ஆடு, பசு மாடு வளர்ப்பு ஆகிய தொழில் முயற்சிகளுக்கு இக்கடனுதவி வழங்கப்பட்டு வருவதாக மன்றத்தின் தலைவர் ந.கந்தையா தெரிவித்தார்.

10 ஆயிரம் ரூபாவாக வழங்கப்பட்டு வரும் இக்கடனுதவி எதிர்வரும் 2001ஆம் ஆண்டில் 15 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டு வழங்கப்படவிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-135)

## மீன்பிடி உதவியாளர் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம் பாங்ஷால் வீதியிலுள்ள பிராந்திய கடற்றொழில் கடலோட்டு இயந்திரவியல் கல்லூரியில் பெண்களுக்கான மீன்பிடி உதவியாளர் பயிற்சிநெறி தற்போது நடைபெற்றுவருகின்றது.

இப் பயிற்சிநெறியில் இருபது பெண்கள் கலந்து கொண்டு பயிற்சி பெறுகிறார்கள் என்று இக்கல்லூரியின் அதிபர் இ.செபஸ்ரியாம்பிள்ளை தெரிவித்தார். (ம-51)

## வெங்காயம் விலை அதிகரிப்பு

அரியாலை,டிசெ.28

யாழ்.குடாநாட்டில் வெங்காயத்தின் விலை உயர்ந்து செல்கிறது.

குடாநாட்டுச் சந்தையில் ஒரு கிலோ சின்ன வெங்காயம் 80 ரூபா முதல் 90 ரூபா வரை விற்கப்படுகின்றது. (ம-17)

## பாடசாலை உபகரணங்கள் அன்பளிப்பு

சில்லாலை கிராம அபிவிருத்திச் சங்கம் வசதி குறைந்த நிலையிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பி மற்றும் பாடசாலை உபகரணங்களை அண்மையில் அன்பளிப்புச் செய்துள்ளது. சங்கத் தலைவர் பி.குசைப்பிள்ளை தலைமையில் சங்க மண்டபத்தில் நடைபெற்ற வைபவத்தில் இவை வழங்கப்பட்டன. (ஐ-135)

## பகல்வேளையில் வீட்டில் புகுந்து திருட்டு

யாழ்ப்பாணம்,டிசெ.28

திருநெல்வேலி, தபால் பெட்டிச் சந்திக்கு அருகில் உள்ள வீடு ஒன்றில் பகல் நேரத்தில் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த 5 ஆயிரம் ரூபா பெறுமதியான வானொலிப் பெட்டியைத் திருடிச் சென்றுள்ளனர்.

வீட்டு உரிமையாளர் மதியம் உணவருந்திவிட்டு நித்திரையாகி விட்ட சமயமே திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர். (ஒ)

## விபத்தில் மாணவி காயம்

நெல்லியடி,டிசெ.28

ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சை எழுதச் சென்ற மாணவி ஒருவர், பஸ் விபத்தில் தலையில் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் கடந்த 22 ஆம் திகதி காலை 8 மணியளவில், கரணவாய் மூத்த விநாயகர் கோயிலடியில் இடம்பெற்றது.

குடமியன் - வரணியைச் சேர்ந்த தங்கராசா - மதுரா (வயது 17) என்ற மாணவியே, காயங்களுடன் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். (ம-109)

## பாடசாலைத் தவணைகள்

வலி.தெற்கு,டிசெ.28

கல்வி உயர் கல்வி அமைச்சுச் செயலாளர், பாடசாலை அபிவிருத்தி வழிகாட்டல் ஆலோசனைக் கல்விப் பணிப்பாளர் ஆகியோரின் அறிவித்தலுக்கமைய ஜனவரி மாதம் முதலாம் திகதி, 2001 ஆண்டுக்கான முதலாம் தவணை ஆரம்பமாக உள்ளது.

முதலாம் தவணை ஜனவரி முதலாம் திகதியில் இருந்து ஏப்ரல் பத்தாம் திகதி வரை நடைபெறும்.

இரண்டாம் தவணை ஏப்ரல் 23 ஆம் திகதியில் இருந்து ஓகஸ்ட் முதலாம் திகதி வரை நடைபெறும்.

மூன்றாம் தவணை ஓகஸ்ட் 28 ஆம் திகதியில் இருந்து நவம்பர் 29 ஆம் திகதி வரை நடைபெறும். (ம-152)

## மீன் விலை நேற்று வீழ்ச்சி

அரியாலை,டிசெ.28

யாழ்.நகரில் மீனின் விலை நேற்று பெரும் வீழ்ச்சி அடைந்து காணப்பட்டது.

தீவுப் பகுதியில் இருந்து வாகனங்கள் மூலம் பெரும் எண்ணிக்கையான மீன் எடுத்து வரப்பட்டதை அடுத்தே விலை வீழ்ச்சி அடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

தற்போது வீசிவரும் காற்றுடன் கூடிய மழையினால் மீன்கள் அதிகளவு வலையில் பிடிபடுவதும் விலை வீழ்ச்சிக்கு மற்றும் ஒரு காரணமாகும். (ம-17)

## ஆஸ்பத்திரிக்கு பாய்கள் அன்பளிப்பு

டெங்குக் காய்ச்சல் மற்றும் நோய்களுக்குச் சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், சங்கானை, அரசினர் வைத்தியசாலை ஆண்கள் வார்டில் தங்கியிருந்து சிகிச்சை பெறுவோருக்கு கட்டில், பாய் போன்ற வசதிகள் குறைவாகக் காணப்பட்டதை அடுத்து சங்கானை வர்த்தகர் சங்கம் 10 நைலோன் பாய்களை ஆஸ்பத்திரி நிர்வாகத்திற்கு அன்பளிப்புச் செய்துள்ளது.

மேலும் இந்த ஆண்கள் வார்டைப் பராமரித்து, துப்புரவு செய்து, வர்ணப்பூச்சு வேலைகள் மற்றும் வார்ட்டுக்குத் தேவையான சிறு உதவிகளையும் சங்கானை வர்த்தக சங்கம் பொறுப்பேற்று செய்து வருகின்றது. (ஐ-29)

## நிமலராஜன் குடும்ப நலன் காக்கும் நிதி

"உதயன்" நிறுவனம் ஆரம்பித்த "நிமலராஜன் குடும்பத்தின் நலன் காக்கும் நிதிக்கு" அதற்குரிய காலம் (டிசெம்பர் 5ஆம் திகதி) முடிவடைந்த பின்னரும் நல்மனம் படைத்த பலரும் தமது நன்கொடைகளை வழங்கினர். இம்மாதம் 15ஆம் திகதிவரையான இடைப்பட்ட பத்து நாள்களிலும் அன்பளிப்புச் செய்தோரின் விவரங்களை 17.12.2000ஆம் திகதிய உதயனில் பிரசுரித்திருந்தோம்.

அதன் பின்னரும், நிதி கையளிக்கப்பட்ட தினமான இம் மாதம் 22 ஆம் திகதி நண்பகல் வரை நன்கொடை வழங்கியோரின் விவரம் வருமாறு:-

| | ரூபா சதம் |
|---|---|
| **முன்கொண்டுவரப்பட்ட தொகை (17.12.2000 ஆம் திகதிய உதயனில் வெளிவந்தது)** | **12,04,188.25** |
| பிரதேச செயலகம் நலன்புரிச் சங்கம், கோப்பாய் | 6,000.00 |
| பிரதான பொறியியலாளர் அலுவலகம், கட்டடத் திணைக்களம், இல.46, சோமசுந்தரம் அவனியு, சுண்டுக்குழி, யாழ்ப்பாணம் | 5,000.00 |
| எஸ்.மல்லிகா - கந்தர்மடம், யாழ்ப்பாணம் | 200.00 |
| கிளிநொச்சி மாவட்ட மாணவர் ஒன்றியம், யாழ்.பல்கலைக்கழகம் | 2,500.00 |
| உதயன் நிறுவன ஊழியர்கள் | 20,000.00 |
| யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், யாழ்.பல்கலைக்கழகம் | 35,000.00 |
| பருத்தித்துறை ப.நோ.கூ.சங்கம், பருத்தித்துறை | 5,000.00 |
| பருத்தித்துறை ப.நோ.கூ.சங்க ஊழியர்கள் | 5,000.00 |
| வங்கி ஊடாக டாக்டர் கே.கந்தசாமி - கரவெட்டி | 300.00 |
| வங்கியூடாக வந்து பெயர் அறிய முடியாதவை | 3,500.00 |
| மொத்தம் | 12,86,686.25 |

## வைத்திய அதிகாரிகளுக்கு மீள் நியமனம் கிடைக்குமா?

திருகோணமலையில் உள்ள வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு, பதவியிலிருந்து ஓய்வு பெற்று மீள்பதவி நியமனம் பெற விண்ணப்பித்தவர்களுக்கு மீள்பதவி நியமனம் வழங்குவதில் புதிய விதிகளைக் கடைப்பிடித்து வருவதாகத் தெரியவருகின்றது.

யாழ்மாவட்டத்தில் அரசாங்க வைத்தியசாலைகளில் டாக்டர்கள், பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரிகள், மருந்தாளர்கள், மருந்துக் கலவையாளர்கள் ஆகியோருக்கு பற்றாக்குறை நிலவி வருவதால் கடந்த பல வருடங்களாக பதவியிலிருந்து ஓய்வு பெற்ற இத் தரங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு மீள்பதவி நியமனம் வழங்கப்பட்டு வருகின்றது. தீவகப் பிரதேசத்திலுள்ள பெரும்பாலான அரச வைத்தியசாலைகளிலும், மத்திய மருந்தகங்களிலும் ஓய்வு பெற்றதன் பின்னர் மீள் நியமனம் பெற்ற டாக்டர்களே தற்பொழுது கடமை புரிந்து வருவது குறிப்பிடத்தக்கது. கடந்த பல வருடங்களாக யாழ்.மாவட்டத்தில் மருந்துக் கலவையாளர் எவரும் புதிதாக நியமனம் செய்யப்படாமல் இருப்பதால் பல அரச வைத்தியசாலைகளில் குறிப்பாக மத்திய மருந்தகங்களில் இவர்களுக்கான வெற்றிடங்கள் பல நிரப்பப்படாமல் இருந்து வருகின்றன. அண்மையில் மீள் நியமனம் பெற்றுக் கடமையாற்றி வந்த சில மருந்துக் கலவையாளர்களுக்கும் தொடர்ந்தும கடமையாற்ற விண்ணப்பித்திருந்த போதும் அவர்களுக்கு மீள் நியமனம் வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார அமைச்சினால் வழங்கப்படவில்லை.

இதேவேளை -

எதிர்வரும் 2001 ஆம் ஆண்டில் கடமையாற்றுவதற்கு விண்ணப்பித்திருக்கும் பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரிகள் (ஆர்.எம்.ஒ.) பலருக்கு இதுவரை நியமனக் கடிதங்கள் கிடைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. தற்பொழுது பத்திற்கு மேற்பட்ட மீள்நியமனம் பெற்ற பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரிகள் (ஆர்.எம்.ஒ) யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றி வருகின்றனர். இவர்களில் பலர் எதிர்வரும் 2001ஆம ஆண்டிலும் தொடர்ந்தும் பணி புரிவதற்கான விண்ணப்பத்தை யாழ்.சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனையூடாக திருகோணமலையில் உள்ள வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி உள்ளனர். இவர்களுக்கும் மீள்பதவி கேட்டு விண்ணப்பித்திருந்த ஏனைய தரங்களைச சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கும் அடுத்த ஆண்டில் தொடர்ந்தும் பணியாற்றுவதற்கான அனுமதிக கடிதங்கள் இதுவரை கிடைக்கவில்லை என்று தெரியவருகின்றது. இவர்களுக்கு தொடர்ந்து கடமையாற்றுவதற்கு அனுமதி வழங்கப்படாவிட்டால் பல கிராமப்புற வைத்தியசாலைகளில் நோயாளர்களுக்கான வைத்திய சேவைகள் பாதிப்படையக் கூடிய அவல நிலை ஏற்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தாங்கள் எதிர்வரும் 2001 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து கடமையாற்றுவதற்கு உரிய முறைப்படி விண்ணப்பித்து இருப்பதாகவும், எதிர்வரும ஜனவரி மாதத்தில் இதற்கான அனுமதிக் கடிதம் வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சிடமிருந்து கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் மீள் நியமனம் பெற்று தற்போது பணியாற்றிவரும் பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரிகள் சிலர் தெரிவித்தனர். (ஐ-135)

## மருந்து கலவையாளர் பதவி வெற்றிடம்

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையில் மருந்துக் கலவையாளர் வெற்றிடம் நிரப்பப்படாமல் இருந்து வருவதால் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியான டாக்டரே மருந்துகளையும் நோயாளர்களுக்கு விநியோகித்து வருகின்றார்.

டாக்டர் தமது ஏனைய கடமைகளுடன் மருந்து கொடுத்தலையும், மருந்துகள் பதிவு வேலைகளையும் மேற்கொண்டு வருவதால் மருந்து பெறுவதற்கு நோயாளர்கள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியுள்ளது.

## வல்லைப் பாலம் திருத்தம்

நெல்லியடி,டிசெ.28

15 இலட்சம் ரூபா செலவில், தற்காலிகமாகப் புனரமைப்புச் செய்யப்பட்டிருக்கும் வல்லைப் பாலம், அடுத்த வருட முற்பகுதியில் 30 மில்லியன் ரூபா செலவில் முழுமையாகச் செப்பனிடப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான நடவடிக்கைகளை வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் மேற்கொண்டுள்ளனர். (ம-109)



ஆன்மீக நாட்டமுள்ள யாழ்.பல்கலைக்கழக மாணவர்களால் அன்னை சாரதாதேவி ஜெயந்தி தின விழா அண்மையில் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடத்தப்பட்டது.

மாணவர்கள் இருவர் குத்துவிளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைக்கின்றனர்.

சுவாமி விவேகானந்தர் 1893 ஆம் ஆண்டு சிக்காக்கோ சர்வமத சபையில் ஆற்றிய உரையை பல்கலைக்கழக மாணவர் ஒருவர் விவேகானந்தரின் தோற்ற ஆடை அணிந்த நிலையில் நிகழ்த்துவதையும் படத்தில் காணலாம். (ம)

# புலிகளின் அறிவிப்பு நல்லதோர் சமிக்ஞை

கொழும்பு,டிசெ.28

விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பு சமாதானத்திற்கான நல்ல சமிக்ஞை. எனவே இரு தரப்புக்களும் கடந்தகால கசப்புணர்வுகளை மறந்து உடனடியாகப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்.

கொழும்பில் செயற்படும் சர்வமத சமாதான மன்றமும், அரசமைப்பு மாற்றத்திற்கான பிரஜைகள் முன்னணியும் இவ்வாறு கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளன.

சர்வமத சமாதான மன்றத்தின் அமைப்பாளர் மாதாம்பாகம அசாஜி திஸ்ஸதேரர், அதன் செயலாளர் அருள்திரு. பிரட்டி பீ.அல்விஸ், அரசமைப்பு மாற்றத்திற்கான பிரஜைகள் முன்னணி அமைப்பாளர் சுரேந்திர அஜித் ஆகியோர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

விடுதலைப் புலிகள் விடுத்துள்ள யுத்த நிறுத்த அறிவிப்பு அவர்களுக்கு சமாதானத்தில் உள்ள அக்கறையைக் காட்டுகிறது. இந்தச் சந்தர்ப்பத்தை அரசு உரிய முறையில் பயன்படுத்த வேண்டும்.

மிக முக்கிய சந்தர்ப்பத்தில் முரண்பாடுகளைக் காட்டிக் கொண்டிருந்தால் சமாதானம் நழுவிச் சென்று விடும்.

நோர்வேயின் உதவியை உரிய முறையில் பயன்படுத்திப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

இந்தக் கோரிக்கையைப் வலியுறுத்தி நாளை மறுதினம் 30 ஆம் திகதி கண்டியில் மாபெரும் கூட்டம் ஒன்றும் இடம்பெறவுள்ளது. (ஐ-3)

## மலசலகூடம் அமைப்பு

சண்டிலிப்பாய்,டிசெ.28

மாதகல் சென்.ஜோசப் மகா வித்தியாலயத்தில் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் உதவியுடன் மலசலகூடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. விரைவில் கட்டட வேலைகள் பூர்த்தியடைய விருப்பதாக வித்தியாலய அதிபர் கா.அழகரத்தினம் தெரிவித்தார். (ஐ-135)

Jaffna College

INSTITUTE OF AGRICULTURE

யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்

SHORT COURSE IN AGRICULTURE

குறுகிய கால விவசாயப் போதனா சாதனா பயிற்சிநெறி

நான்கு மாத காலம் விவசாய மூலதத்துவம், பயிரியல், பூங்கனியியல், மிருகபரிபாலனம் ஆகிய துறைகளை உள்ளடக்கிய இலவச பயிற்சிநெறிக்கு க.பொ.த. (சாதாரண) தரம் கல்வி கற்ற 16-26 வயதுக்கிடைப்பட்ட இருபாலாரிடமும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப் பயிற்சிநெறிக் காலத்தில் உதவு தொகை வழங்குவதுடன் பயிற்சிநெறி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

இப் பயிற்சிநெறியில் சேரவிரும்புவோர் 10-01-2001 காலை 9.00 மணிக்கு எமது நிறுவனத்தில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்குப் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கல்வித்தகைமைப் பத்திரங்கள், கிராமசேவையாளரின் நற்சான்றிதழ், வேறு இரு நற்சான்றிதழ்களுடன் நேரில் சமுகமளிக்கவும்.

மேலதிக விவரங்களுக்கு:-

அதிபர்,
யாழ்ப்பாணக்கல்லூரி விவசாய நிறுவனம்,
மருதனார்மடம், சுன்னாகம். (82162)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 10 - 10 - 1922



உதிர்வு 28 - 11 - 2000

### திருமதி சிவஞானமணி அழகரத்தினம்

அன்புடைய நல்ல தாயாராய் இருந்து
பக்குவமுள்ள மாமியாய், பரிவு கொண்ட பேர்த்தியாய்,
பாசத்தின் மேல் பாசம் மிக்க பூட்டியாய்
எம்முடன் வாழ்ந்து மறைந்த
உங்கள் நினைவை என்றும் மறவோம்.

28-11-2000 அன்று அமரத்துவம் அடைந்த எங்கள் தாயாரின் இறுதிக்கிரியைகளில் பங்குகொண்டு சகல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு -

இன்று (28.12.2000) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துசிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

நிரந்தர முகவரி:
*27/4, பாண்டியன்தாழ்வு,*
*சுண்டுக்குளி.*

தற்காலிக முகவரி:
*அதிகார் செல்லமுத்து வீதி,*
*புளியடி சந்தை, மானிப்பாய்.*
T.P.070-212927

(82093)



யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 25 வருட சேவையைப் பூர்த்தி செய்த இரண்டு பணியாளர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் வைபவம் அண்மையில் சங்கத் தலைவர் சீ.வி.கே. சிவஞானம் தலைமையில் சங்கத்தின் கேட்போர்கூட மண்டபத்தில் நடைபெற்றது.

எஸ்.பாலச்சந்திரன், என். இராசரெட்ணம் ஆகிய இரண்டு விழா நாயகர்களுக்கும் சங்க இயக்குநர் சபா.தியாகராஜா, கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கே.சண்முகநாதன் ஆகியோர் மலர் மாலை அணிவித்து சான்றிதழ் வழங்கிக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.

*(படம்:-பா.நந்தகுமார், அரியாலை செய்தியாளர்)*

# மீன்பிடி வலைகள் இனி குடாநாட்டிலேயே உற்பத்தி

## ஜெகன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.28

குடாநாட்டு மீனவர்களுக்குத் தேவையான மீன்பிடி வலைகளை குடாநாட்டிலேயே உற்பத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.வி.குகேந்திரன் (ஜெகன்) ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த காலங்களில் எமது மீனவர்களுக்குத் தேவையான வலைகள் சீநோர் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்டன. யுத்த நடவடிக்கைகளினால் இந்த தொழிற்சாலை முற்றாக சேதமடைந்து இயங்க முடியாத நிலையில் தற்போது உள்ளது. இந்தத் தொழிற்சாலையில் உள்ள இயந்திரங்களை திருத்தி அமைத்து அவற்றைக் கொண்டு முதற்கட்டமாக வலைகளை உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

இன்றைய சூழ்நிலையில் எமது மீனவர்களுக்குரிய வலைகளை நாமே உற்பத்தி செய்வதே பொருத்தமானது. இங்கு உற்பத்தியாகும் வலைகளுக்கு மீனவர் மத்தியில் பெரியளவில் வரவேற்பும் உண்டு.

மேலும் இந்த சீநோர் தொழிற்சாலையை மீண்டும் இயக்குவதன் மூலம் வேலையற்று இருப்பவர்களுக்கு வேலை வாய்ப்புக்களையும் வழங்கமுடியும். சீநோர் தொழிற்சாலையின் அடுத்த கட்ட அபிவிருத்திப் பணியாக கழிவு மீன்களைப் பயன்படுத்தி கோழித் தீவனம் தயாரிக்கும் தொழிற்சாலையினை குடாநாட்டில் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் விடுத்த வேண்டுகோளை அடுத்து கண்ணாடி இழைப்படகு தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை கரம்பொனில் நிர்மாணிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

ஈ.பி.டி.பி.யின் யாழ்.அலுவலகத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் யாழ்.அரச அதிபர் க.சண்முகநாதன், சீநோர் தொழிற்சாலை அதிகாரிகள், கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க அதிகாரிகள், கடற்றொழிலாளர் சமாசப் பிரதிநிதிகள் ஆகியோருடன் நல்லூர் பிரதேசசபைத் தலைவரும் கலந்து கொண்டார். (ம-6)

## துரையப்பா ஸ்ரேடிய கூரை சீற்றுகள் தூக்கி வீசப்பட்டன

அரியாலை,டிசெ.28

யாழ்.துரையப்பா ஸ்ரேடியத்தின் கூரை சீற்றுகள் கடும் காற்றினால் தூக்கி வீசப்பட்டுள்ளன.

நேற்று முன்தினமிரவு வீசிய கடும காற்றினாலேயே இவை தூக்கி வீசப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிலையத்தின் சீற்றுகளும் கடும் காற்றினால் விலகி உள்ளன. (ம-17)

நவீல்ட் பாடசாலை

பழைய மாணவர்கள் நடத்தும்

கிறிஸ்மஸ் விழா (ஒளி விழா)

எமது பழைய மாணவர் சங்கம் இன்று (28.12.2000) வியாழக்கிழமை காலை (புதிய நேரம்) 9.00 மணிக்கு நவீல்ட் பாடசாலைப் பிள்ளைகளுக்கு பரிசில்கள் வழங்க உள்ளதால், பிள்ளைகளைத் தவறாது பாடசாலைக்குக் கூட்டி வரும் வண்ணம் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மேற்படி பாடசாலை பழைய மாணவர் சங்க அனுசரணையில் இடம்பெறவுள்ள இந்த வைபவம் சுண்டுக்குளியில் உள்ள சென்.ஜோன்ஸ் அக்கடமியில் நடைபெறும்.

**க.சுரேந்திரநாதன்**
தலைவர்

**வீ.மோகனதாஸ்**
செயலாளர்

உ

முருகன் துணை

# தசாக கிருஹயக்ஞ அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் விக்கிரம வருடம் மார்கழி மாதம் 5 ஆம் நாள் (20-12-2000) புதன்கிழமை முருகனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர்

**சிவஸ்ரீ சுவாமிநாதக்குருக்கள் இராஜேந்திரக்குருக்கள்** அவர்களின்
(பிரதமகுரு, நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தானம்)
ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

| | | | |
|---|---|---|---|
| 29-12-2000 | வெள்ளிக்கிழமை | பகல் 10 மணி | - தசாகம் |
| 30-12-2000 | சனிக்கிழமை | பகல் 10 மணி | - ஏகோதிட்டம் + மாசிகம் |
| 31-12-2000 | ஞாயிற்றுக்கிழமை | பகல் 10 மணி | - சபிண்டீகரணம் |
| 01-01-2001 | திங்கட்கிழமை | பகல் 12 மணி | - கிருஹயக்ஞம் (மதியபோசனம்) |

இறுதிக்கிரியைகளில் பங்குபற்றிய அனைவரும் மேற்படி கிரியைகளில் பங்குபற்றி முருகனடி சேர்ந்த அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
**சிவஸ்ரீ இராஜேந்திர. சுவாமிநாதக் குருக்களும் மற்றும் குடும்பத்தினரும்.**

*கந்தசுவாமி தேவஸ்தானம்,*
*நீர்வேலி.*

(82153)

நூலகம் யாழ்ப்பாணம்

# சமாதானத்துக்கான யுத்தம் நடத்தும் அரசு மிருசுவில் படுகொலைக்கு என்ன பதில் கூறும்?

## ரெலோ அமைப்பு கேள்வி

யாழ்ப்பாணம்,டிசெ.28

தமிழர்களுக்கான யுத்தம் அல்ல; இது சமாதானத்துக்கான யுத்தமே எனக் கூறும் அரசு மிருசுவில் படுகொலைகளுக்கு என்ன பதில் கூறப் போகின்றது?

இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளது ரெலோ அமைப்பு.

மிருசுவில் படுகொலைகள் தொடர்பாக ரெலோவின் யாழ்.மாவட்ட அமைப்பாளரும், பிரசாரச் செயலாளருமான என்.கே.விந்தன் விடுத்த அறிக்கை ஒன்றிலேயே இந்தக் கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது.

அறிக்கையின் முழு விவரம் வருமாறு:-

மிருசுவில் வடக்கு படித்த மகளிர் குடியேற்றத் திட்டப் பகுதியில் இராணுவத்தினரின் அனுமதிபெற்று கடந்த 19 ஆம் திகதி தங்கள் வீடுகளையும் காணிகளையும் பார்க்கச் சென்ற எட்டுப் பேரையும் இராணுவத்தினர் கொடூரமாகக் கொன்று புதைத்துள்ளனர்.

அரியாலை, செம்மணி போன்ற புதைகுழிகளுக்கு ஒப்பான செயலை மீண்டும் அரச படையினர் யாழ்.மண்ணில் அரங்கேற்றி உள்ளனர். இப்படியொரு சம்பவம் ஒன்று தமிழர் தரப்பால் சிங்களப் பகுதியில் சிங்களவருக்கு ஏற்பட்டிருந்தால் அந்தப் பகுதியில் வாழும் அனைத்துத் தமிழர்களையும் சுற்றிவளைப்பு மூலம் கைதுசெய்து சித்திரவதைக்கு உட்படுத்திச் சிறையில் போட்டிருப்பார்கள். உடைமைகளைச் சூறையாடியிருப்பார்கள். வீடு வாசல்களை அடித்து நொறுக்கிக் கொளுத்தியும் விட்டு இருப்பார்கள் சிங்களவர்கள். அது மட்டுமல்ல பாதிக்கப்பட்ட சிங்கள மக்களுக்கு உடன் அரசால் நஷ்டஈட்டுத் தொகையும் வழங்கப்படும். அமைச்சர்களும் அதிகாரிகளும் விழுந்தடித்து விஜயம் மேற்கொள்வார்கள். ஆறுதல் கூறுவார்கள், அனுதாபம் தெரிவித்துக் கண்டனக் குரல்கள் எழுப்புவார்கள். அரச செலவில் அடக்க செலவுகளும் இடம்பெறும். தீவிர விசாரணைகளும் முடுக்கி விடப்படும்.

சமாதானத்துக்கான யுத்தம், தமிழர்களுக்கு எதிரான யுத்தம் அல்ல என பகட்டு நாடகமாடும் அரசு இக்கோரச் செயலுக்கு என்ன பதில் கூறப்போகின்றது? குற்றமிழைத்தவர்களுக்கு என்ன தண்டனை வழங்கப் போகின்றது? நிச்சயமாக வழங்கும் பதவி உயர்வை மட்டும். அது மட்டுமல்ல குற்றமிழைத்தவர்களைக் கைதுசெய்துள்ளோம், நீதியின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படுவார்கள் என ஒரு கண்துடைப்புக்கு ஆயிரம் வாக்குறுதிகளும் அள்ளி வீசப்படும். கடைசியில் மண்ணோடு மண்ணாக மனித நீதியும் புதைக்கப்படும். இது தான் இலங்கைச் சட்ட ஒழுங்கின் விதியும் - கதியும்.

இலங்கையில் எமக்கென ஒரு தேசம், மொழி, கலாசாரப் பண்பு, தனித்துவம் உண்டு. இதைச் சீரழித்து சின்னாபின்னமாக்கிக் கொண்டு இருக்கும் ஸ்ரீலங்கா இராணுவம் தமிழரின் தாயக மண்ணில் இருந்து விலகி எம் இனத்தவர்களை நிம்மதியாக வாழ விடவேண்டும். அது மட்டுமல்ல குடாநாட்டில் இறந்தவர்கள், இடம்பெயர்ந்தவர்கள், வெளிநாடுகளுக்குச் சென்றவர்களின் வாக்குச் சீட்டுக்களைக் களவாகப் பெற்று கள்ள வாக்குப் போட்டு தங்களைத் தாங்களே நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்தவர்கள் பாதுகாப்பு நிதி ஒதுக்கீடு அவசரகாலச் சட்டம் போன்றவற்றுக்கு ஆதரவாக விழுந்தடித்து நாடாளுமன்றத்தில் கையை உயர்த்துகிறார்கள். அத்துடன் தமிழர்களுக்கு எதிரான ஒடுக்குமுறைச் சட்டங்களுக்கும் அரைகுறைத் தீர்வுத் திட்டங்களுக்கும் அரசுக்கு முண்டு கொடுத்து ஆணிவேராகப் பயன்படுகிறார்கள். இவர்கள் தங்களைத் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகக் காட்டிக் கொள்ளவும் பின் நிற்கவில்லை. *'பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்'* என இரட்டை வேடம் பூண்டுள்ள இவர்கள் தமிழர்களுக்கு எதிரான அழித்தொழிப்பு யுத்தத்தில் நேரடியாகவும் மறைமுகமாகவும் துணை போய் அரசுக்கு ஆலோசனை கூறி ஆதரவு தெரிவிப்பதையும் நிறுத்த வேண்டும்.

மண்ணில் விதைக்கப்பட்ட எட்டு உடன்பிறப்புக்களுக்கும் எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்கிப் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம் -

என்றுள்ளது. (ஐ)

## கடும் காற்றினால் வாழைமரங்கள் முறிந்து வீழ்ந்தன

வலி.தெற்கு,டிசெ.28

குடாநாட்டில் கடந்த சில தினங்களாக வீசிய கடும் காற்றினாலும் மழையினாலும் வலிகாமம் தெற்குப் பகுதியில் உள்ள பல நூற்றுக்கணக்கான வாழைமரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன.

உடுவில், மருதனார்மடம், உரும்பிராய்ப் பகுதிகளில் புதிதாக செய்கை பண்ணப்பட்ட பல வாழைத் தோட்டங்களில் வாழைமரங்கள் முறிந்துள்ளமையால் தோட்ட செய்கையாளர்கள் பெரும் நஷ்டம் அடைந்துள்ளனர்.

வாழைமரங்கள் மட்டுமல்லாது பல பயனுள்ள மரங்களும் கொப்புகளும் முறிந்தும் வேரோடு சாய்ந்தும் போயுள்ளன. (ம-152-17)

## டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

வலி.தெற்கு,டிசெ.28

டெங்குக் காய்ச்சல் தடுப்பு முயற்சியாக சுன்னாகம் ஐயனார் கோயிலடி, மயிலணி, சுன்னாகம் சபாபதிப்பிள்ளையார் வீதி ஆகிய இடங்களில் சிரமதானப் பணிகள் இடம்பெற்றன.

சுன்னாகம் பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் கண்காணிப்பில் மேற்படி இடங்களில் உள்ள பொது மக்களும் பொது நிறுவன அமைப்புக்களும் இணைந்து சிரமதானத்தில் ஈடுபட்டனர். (ம-152)

# மிருசுவில் படுகொலைகள் தொடர்பாக பூரண விசாரணை நடத்தப்பட வேண்டும்

## ஈ.பி.டி.பி. அமைப்பு கோருகிறது

கொழும்பு,டிசெ.28

மிருசுவில் பகுதியில் தமது வீடுகளைப் பார்வையிடச் சென்ற எட்டுப் பேர் படையினரால் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக பூரண விசாரணை நடத்தப்பட வேண்டும்.

ஈ.பி.டி.பி. அமைப்பினர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த 19ஆம் திகதி மிருசுவில் பகுதியில் தங்கள் வீடுகளைப் பார்வையிடச் சென்றவர்களில் 9 பேர் அப்பகுதியில் நிலைகொண்டுள்ள சில இராணுவச் சிப்பாய்களினால் கைது செய்யப்பட்டுத் தாக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவத்தில் ஒருவர் காயங்களுடன் தப்பி வந்து எமது அலுவலகத்தில் மேற்படி அசம்பாவிதம் குறித்து முறைப்பாடு செய்துள்ளார். இவர் ஈ.பி.டி.பி. அமைப்பினரால் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளார்.

இவரது வாக்குமூலத்தின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்ட ஏனையவர்களை மீட்க பொலீஸ் உதவியுடன ஈ.பி.டி.பி. முயற்சிகளை மேற்கொண்டது. இதனையடுத்து கைதுசெய்யப்பட்ட அனைவரும் கொல்லப்பட்டுள்ளனர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் குறித்து ஈ.பி.டி.பி. தனது அதிர்ச்சியையும், கவலையையும் தெரிவித்துக் கொள்கின்றது.

இந்த அசம்பாவித சம்பவம் குறித்து பூரண விசாரணை நடத்தவதுடன் இச்சம்பவத்தின் பின்னணியில் உள்ளவர்களுக்கு உரிய தண்டனையும் வழங்கப்பட வேண்டும் எனவும் -

இதேவேளை படைத்தரப்பினர், இத்தகைய அசம்பாவிதங்கள் இனி மேலும் தொடரமாட்டாது என்று உத்தரவாதம் அளிக்க வேண்டும் எனவும் -

சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களின் குடும்பங்களுக்கும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்துக்கும் உரிய நஷ்டஈட்டினை வழங்க வேண்டும் எனவும் - ஈ.பி.டி.பி. கேட்டுக் கொள்கின்றது.

இந்தச் சம்பவத்தினை அடுத்து அமைதியையும் சமாதானத்தையும் நிலைநாட்ட முனையும் சக்திகளின் செயற்பாட்டுக்கு ஊறு விளைவிக்காதவாறு எமது சமூகத்தின் அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும். அதேவேளை யுத்தமுனைப் பகுதிகளுக்குள் எதுவித அனுமதியோ அல்லது முன்னறிவிப்புக்களோ இல்லாமல் மக்கள் எவரும் செல்லவேண்டாம் எனவும் - இதன் மூலம் இத்தகைய அசம்பாவிதங்களைத் தவிர்த்துக்கொள்ள முடியும் எனவும் ஈ.பி.டி.பி. கேட்டுக்கொள்கின்றது.

இப்படி அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது. (ம)

# தகவல் தொழில் நுட்பப் பூங்கா யாழ்நகரில் விரைவில் நிறுவப்படும்

யாழ்.நகரில் தகவல் தொழில் நுட்பப் பூங்கா ஒன்றினை விரைவில் அமைப்பதற்கான ஏற்பாடுகளை வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு, மற்றும் வடக்கு கிழக்கு தமிழ் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு, மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

யாழ்.மக்களின் தகவல் தொழில் நுட்ப அறிவினை விருத்தி செய்வதற்கு வசதியாக அமைக்கப்படவுள்ள இந்த தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் சர்வதேச வலைப்பின்னல்களுக் கூடாக தகவல்களை பரிமாறக் கூடிய வசதி ஏற்படுத்தப்படும்.

சிறுவர்களுக்கான கணனிப் பயிற்சி வசதி, ஏனையவர்களுக்கான கணனிப்பயிற்சி வசதி மற்றும் தகவல் தொழில்நுட்ப நூல்நிலைய வசதி ஆகியவற்றையும் இப்பூங்கா கொண்டிருக்கும்.

தகவல்களைப் பரிமாறுவதற்காக இந்தப் பூங்காவில் 15 தொடக்கம் 30 வரையிலான கணனிகள் கொண்ட இணைப்புக் கூடம் ஒன்றும் அமைக்கப்பட்டு அது தொடர்பான விளக்க வகுப்புகளும் நடத்தப்படும்.

சிறுவர்களுக்கும், ஏனையவர்களுக்கும் என இரு பிரிவாக அமைக்கப்படவுள்ள கணனி பயிற்சி நிலையங்களில் மிகக் குறைந்த கட்டணத்துடன் பயிற்சி பெறமுடியும்.

இதன் அடுத்த கட்டமாக குடாநாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் தகவல் தொழில்நுட்பப் பூங்காவின் கிளைகள் நிறுவப்பட்டு கணனிப் பயிற்சியளிக்கப்படும் -

இப்படி அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-6)

# வேலணையில் இறைச்சிக்கடை திறக்கப்படுவதற்கு எதிர்ப்பு!

## பசு இன வதை தடுப்பு சங்கம் அமைச்சருக்கு கடிதம்

வேலணை பிரதேச சபையினால் அடுத்த ஆண்டில் வேலணைப் பகுதியில் திறக்கத் திட்டமிடப்பட்டுள்ள மாட்டிறைச்சி விற்பனை நிலையத்தைத் திறக்க வேண்டாம் எனக்கோரி யாழ்.மாவட்ட பசு இன வதை தடுப்பு, பாதுகாப்புச் சங்கம் இந்துசமய கலாசார அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

பக்ஸ் மூலம் அனுப்பப்பட்டுள்ள அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்தப் பிரதேசத்தில் முன்னொரு போதும் மாட்டிறைச்சிக்கடை திறக்கப்படவில்லை. தாங்கள் அமைச்சர் பதவியை பொறுப்பேற்ற பின்னர் இந்த அனுமதி வழங்கப்பட்டிருப்பது சைவ சமயத்து பக்தர்களின் மனதைப் பெரிதும் புண்படுத்தும் செயலாகும்.

இந்த விடயத்தில் கருணை உளளத்துடன் தாங்கள் தலையிட்டு இந்தக் கொடூரச் செயலைத் தடுத்து நிறுத்தும் நடவடிக்கைகளை துரிதப் படுத்துவீர்கள் என எதிர்பார்க்கின்றோம்.

என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-6)

# மீனவர் பிரச்சினை தொடர்பாக அமைச்சரைச் சந்திக்க முடிவு

யாழ்ப்பாணம்,டிசெ.28

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் கடற்தொழிலாளர்கள் தொழில் செய்வதைப் போன்று குடாநாட்டு மீனவர்களும் தமது தொழிலைச் சுதந்திரமாகச் செய்வதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்து தருமாறு வடக்கு புனர்வாழ்வு, தமிழ் விவகார அமைச்சரைக் கோருவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் கடற்தொழிலாளர் சங்க சமாசத்தில் நடந்த கலந்துரையாடலில் கடற்றொழிலாளர் சங்க பிரதிநிதிகளால் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

யாழ்வந்துள்ள அமைச்சர் டக்ளஸ தேவானந்தாவை விரைவில் சந்தித்து உரையாடுவது என்றும் -

அப்போது இந்தக் கோரிக்கையை முன்வைப்பது எனவும் -

தீர்மானிக்கப்பட்டது.

இதற்காக அமைச்சரைச் சந்திப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு மீனவ பிரதிநிதிகள், சமாசத் தலைவர்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

அமைச்சரை நேரில் சந்தித்து உரையாடுவதன் மூலமே தமது கோரிக்கைகளை முன்வைக்க முடியும் எனவும் -

மகஜர்கள் அனுப்புவதன் மூலம் இதுவரை எந்தவிதமான ஆக்கபூர்வ முடிவுகளையும் தாம் பெற்றுக்கொள்ளவில்லை என்பதையும் -

மீனவர் சங்கப் பிரதிநிதி ஒருவர் சுட்டிக்காட்டினார். (ம-6)

# அரசு புலிகளுடன் பேசும்போதும் படையினர் போரைத் தொடர்வர்

## ஜானக பெரேரா தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.28

விடுதலைப் புலிகளுடன் அரசு பேச்சு நடத்தும் போதும் படையினர் புலிகளுக்கு எதிரான போரைத் தொடர்ந்து நடத்துவார்கள்.

இராணுவத்தின் பிரதம தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினருக்கு உதவி வழங்கும் நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.

பேச்சுக்கள் நடைபெறும் போதும் படையினர் யுத்தத்துக்கும் தயாராக இருக்க வேண்டும். விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்த முற்பட்டால் நாம் அதனை எதிர்த்து நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும்.

சமாதானத்துக்கு அழைப்பு விடுத்துள்ள எமது ஜனாதிபதியின் கோரிக்கைக்கு நாம் கௌரவம் அளிப்பது அவசியம் -

யுத்தத்தில் வெற்றியடைய இராணுவத்தில் இணைந்து கொள்வோரின் தொகை அதிகரிக்க வேண்டும்.

படையினரின் நலன்களைக் கவனிக்க ஜனாதிபதி பல குழுக்களை நியமித்துள்ளார்.

துட்டகைமுனு யுத்தத்துக்குச் சென்ற போது அவனுடன் சென்ற பத்து இராட்சதர்கள் போன்று நாமும் யுத்தத்துக்கு முன் செல்ல வேண்டும்.

இவ்வாறு அவர் மேலும் கூறினார். (ம-8)

## அதிபர் பதவி வெற்றிடங்கள்

வலி.தெற்கு,டிசெ.28

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் உள்ள வண்ணார்பண்ணை நாவலர் மகாவித்தியாலயம், கோண்டாவில் றோமன் கத்தோலிக்க பாடசாலை, கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாலயம், நீர்வேலி கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கான அதிபர் வெற்றிடங்கள் நிரப்பப்பட உள்ளன.

இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் அனுப்பி வைக்குமாறு யாழ்.வலய கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

இலங்கை அதிபர் சேவை தரம் II, தரம் III ஆகிய பாடசாலைகளில் அதிபர்களாக கடமையாற்றுவோரிடமிருந்தே விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. (ம-152)



**ஊனமுற்றோர் தினம் அண்மையில் ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தினால் சங்க அலுவலகத்தில் நடத்தப்பட்டது. அன்றைய தினம் இடம்பெற்ற நிகழ்வுகளில் ஊனமுற்றோருக்கான மூச்சக்கர வண்டி ஓட்டப் போட்டியும் இடம்பெற்றது. அப்போட்டியில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரைப் படத்தில் காணலாம்.**

*(படம்: வலி.கிழக்கு செய்தியாளர்)*

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

**17.5KW (3 PHASE)** டைனமோவுடன் கூடிய **Lister** எஞ்சின், கிறேசருக்கு பாவிக்கக் கூடிய **BLACK STONE** எஞ்சின், சீவல்மெசின் **(16" Italy)** ஆகியன விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: **J.** தீஸ், காளிகோயிலடி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (82159)

### தவறிவிட்டது

க.குகசீலன் இல. 28, சின்னாலங்கண்டு வீதி, அரியாலை என்னும் முகவரியுடைய தே.அ.அட்டை (இல. 802421419V), விசேட.அ.அட்டை (இல. 0902006063), பாடசாலை அ.அட்டை என்பன 24-12-2000 அன்று நாவலர் வீதிக்கும், கஸ்தூரியார் வீதிக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கஸ்தூரியார் வீதி, ஸ்ரீ அமலா நகைமாடத்தில் தயவு செய்து ஒப்படைக்கவும். (82160)

பூண்டுலோயா சீன்தோட்டம் தமிழ் மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றும் திருமதி தர்மலிங்கம் சற்குணம் என்பவருடைய தே.அ.அட்டையும், ஆசிரியர் அ.அட்டையும் 24-10-2000 அன்று வல்லிபுரக் கோயிலிலிருந்து நல்லூர் கைலாய பிள்ளையார் கோயிலடிக்கு வரும் போது தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் வ.சத்தியசீலன், திட்டமிடல் உதவிப்பணிப்பாளர், புனர்வாழ்வு, கச்சேரி எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். அல்லது. **T.P. 2774** இற்கோ தொடர்பு கொள்ளவும். (82172)

### உடன் தேவை.

மோட்டோ ரோலர் ரெலிபோன் ஒன்று சகல உபகரணங்களுடனோ அல்லது பகுதியாகவோ உடன்தேவை. தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ வாங்கப்படும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: **N.** பாலசுப்பிரமணியம், முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். **T.P.3560.** (82181)

### புறொயிலர் கோழி விற்பனைக்கு

கொழும்பிலிருந்து விமானம் மூலம் தருவிக்கப்பட்ட சுத்தம் செய்த புறொயிலர் இறைச்சிக் கோழி தினமும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: T.கரன், ஆஸ்பத்திரி வீதி, கஸ்தூரியார் வீதிச் சந்திக் கடை, யாழ்ப்பாணம். (81880)


**ஞானோதய அக்கடமி**
(சாவகச்சேரி)
(K.K.S. வீதி - இணுவில்)

**A/L 2000 & 2001 Paper**

* அலகு ரீதியான மீட்டல்.
* அலகு ரீதியான வினாவிடை.
* மாதிரி வினாக்கள்.

**Sat, Sun. 10-12 a.m**
**Chemistry - அன்பு**
(82168)



தென்மராட்சி மாணவர்களின் நலனுக்காக...

**ஞானோதய அக்கடமி**
(சாவகச்சேரி)

ஸ்ரீகாந்தாவில்
*K.K.S. Road - இணுவில்.*
வர்த்தகப் பிரிவு
**A/L 2003**


ஆரம்பம்:- 01.01.2001
Mon. 12.00 - 2.00 p.m

*எமது ஆசிரியர் குழு:*

★ வர்த்தகம் - B.பசில்
★ கணக்கீடு - K.பார்த்திபன்
★ பொருளியல் - R.அன்ரனி
★ I.Q. - T.தவசேகர்

*NOTE:-*
சகல இட மாணவர்களுக்கும் அனுமதி வழங்கப்படும்.
(82167)


இலக்கிய நூற் பரிசு பெற்ற
கலைஞர்
*'கீர்த்தன மாலை'*
நூல் ஆசிரியர்
மீசாலையூர்
**அ.கி. ஏரம்பமூர்த்தி**
அவர்களைப்
**பாராட்டுகின்றோம்**



கொழும்பு - இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், திருகோணமலை வடக்கு-கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு ஆகியவற்றின் 1998 ஆம் ஆண்டுக்கான **இலக்கிய நூற் பரிசுப் போட்டியில்** சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர், சங்கீதபூஷணம், தமிழிசைக்கவிஞர் ஆக்கியுள்ள **கீர்த்தனமாலை** நூலுக்குப் பரிசு கிடைத்தமையை அறிந்து மனமகிழ்வுடன் பாராட்டுகின்றோம். இந் நூலிற்கு முன் செந்தமிழ்க் கீதமாலை, தெய்வக் கீதமாலை ஆகிய நூல்களையும் ஆக்கிய அவர்களது கலைச் சேவை நீடு வாழ்க!

*சிவசக்தி சங்கீத நர்த்தனாலய மாணவர்கள்.*
*மீசாலை மேற்கு, மீசாலை.* (82173)

# கண்ணீர் அஞ்சலி



வடலியடைப்பு, பண்டத்தரிப்பில் பிறந்து வளர்ந்தவரும் மன்னாரை வாழ்விடமாகக் கொண்டவரும் பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவனும் பண்டத்தரிப்பு சங்கிலியன் கழகத்தின் ஆரம்பகர்த்தாவும், பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஆரம்பகால செயலாளரும், வானொலி நாடகம், மேடைநாடகம் எழுதித் தயாரித்து புகழ்பெற்றவருமான

**தி.வ.அரியரத்தினம்**

அவர்கள் காலமானதை அறிந்து சொல்லொணாத் துயர் அடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

பண்டத்தரிப்பு நண்பர்கள் சார்பில்
**வே.சண்முகலிங்கம்.**
(82179)

# 31 ஆம் நாள் நினைவு தினத்தில் நினைவு கூருகின்றோம்

தாயின் மடியில்
12 - 03 - 1937



இறைவன் அடியில்
28 - 11 - 2000

## அமரர் ஆறுமுகம் கனகசபை

(ஓய்வு பெற்ற இ.மி.ச. ஊழியர்)

எங்கள் ஆருயிர் நண்பன் கோடீஸ்வரனின் தந்தையாரின் பிரிவுத் துயரினால் துடித்து நிற்கும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

**-அரியாலை நண்பர்கள்.**

தற்காலிக முகவரி:
*உடுவில் தெற்கு,*
*சுன்னாகம்.*

நிரந்தர முகவரி:
*25, வைரவர்கோயில் வீதி,*
*அரியாலை.*

(82176)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

HAPPY



BIRTHDAY

செல்வி
# மேதா முத்துக்குமார்

535, பரமேஸ்வராச் சந்தியில் வசிக்கும்
**முத்துக்குமார் - இரட்னேஸ்வரி**
தம்பதிகளின் அன்பு மகள்

மேதாகுட்டி தனது முதலாவது பிறந்தநாளை இன்று (28.12.2000) வியாழக்கிழமை தனது இல்லத்தில் விமரிசையாகக் கொண்டாடுகின்றார். மேதாவை அன்பு அப்பா, அம்மா, பாட்டா, பாட்டி (இந்தியா), சித்தப்பா, சித்தி (ஜேர்மனி), மாமாமார், மாமிமார் (இந்தியா), இலங்கையைச் சேர்ந்த தாத்தா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, அண்ணாமார், மாமா, அத்தை, பாலசிங்கம் தாத்தா, பாட்டி, சித்திமார், மாமி, பிள்ளைகளான கிரிதியாகினி (கனடா), றெஜி (ஜேர்மனி) மற்றும் அண்ணன்மார்கள் உறவினர், நண்பர் யாவரும் எல்லாம் வல்ல இறையருளால் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

**- மாருதி ரெக்ஸ்.**

நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.
(C/14484)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு
12 - 03 - 1937



உதிர்வு
28 - 11 - 2000

## அமரர் ஆறுமுகம் கனகசபை

(ஓய்வு பெற்ற இ.மி.சபை ஊழியர்)

அன்புகளை அள்ளி வீசி
பண்புகளை வளர்த்துத் தந்த
அருமைத் தெய்வமே! என்றும்
எம் நெஞ்சத்தை விட்டு நீங்காது!
உங்கள் நினைவுகள்.

அன்னாரின் மறைவையொட்டி பலவழிகளிலும் ஆறுதல் வழங்கிய அனைத்து நெஞ்சங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (28-12-2000) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் அனைவரையும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.*

உங்கள் பிரிவால் தவிக்கும்
**- குடும்பத்தினர்.**

நிரந்தர முகவரி:
*25, வைரவர்கோயில் வீதி,*
*அரியாலை.*

தற்காலிக முகவரி:
*உடுவில் தெற்கு,*
*சுன்னாகம்.*

(82175)

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

... இழந்த நிலையில்

# ...வெளி நிலையம் ...து விழும் ஆபத்து!

## ...ஞ்ஞானிகள் அச்சம்!!

...த்திருந்து பராமரிக்கும் ...லவைத் தாக்குப் பிடிக்க ...யாமலேயே ரஷ்ய அரசு ...த முடிவை எடுத்தது.

115 தொன் எடையுள்ள 'மிர்' ஆய்வு கூடத்தைக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு படிப்படியாக பூமியை நோக்கி இறக்கி அதனைப் பசுபிக் சமுத்திரத்தில் விழுத்த விஞ்ஞானிகள் திட்டமிட்டுள்ளனர்.

ஆனால், கடந்த இருநாள்களாக 'மிர்' ஆய்வு கூடத்துடனான தொடர்பு சில தடவைகள் தடைப்பட்டதாகக் கூறப்படுகிறது

இதனால் தொடர்பு முற்றாகத் துண்டிக்கப்படக் கூடும் என்று விஞ்ஞானிகள் இப்போது தெரிவித்துள்ளனர்.

துரதிஷ்டவசமாக 'மிர்' ஆய்வு கூடத்துடனான தொடர்பு முற்றாகத் துண்டிக்கப்பட்டால், 'மிர்' கட்டுப்பாடின்றிப் பூமியில் தானாக விழும்.

அந்தச் சமயத்தில், தரைப் பகுதியில் - மக்கள் உள்ள பிரதேசத்தில் - விழுந்து சேதங்களை ஏற்படுத்தும் அபாயம் உள்ளதாக ரஷ்ய விஞ்ஞானிகள் அச்சம் தெரிவித்துள்ளனர். (ஒ—8—6)

...லை உருவாகி யுள்ளதால், அது கட்டுப்பாடின்றி பூமியில் விழும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

ரஷ்யாவின் 'மிர்' விண்வெளி ஆய்வு கூடத்தை அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதத்தில் பசுபிக் சமுத்திரத்தில் விழுத்த ரஷ்ய விண்வெளி ஆய்வு மைய விஞ்ஞானிகள் தீர்மானித்திருந்தனர்.

விண்வெளியில் தொடர்ந்து 'மிர்' ஆய்வு கூடத்தை

...

இவர் ...துக்கு முன்னர் திருமணம் செய்து கொண்ட ரஹ்மானா என்ற இந்தியப் பெண்ணையும் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

செங்கோட்டை மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கான திட்டத்தை அஷ்ரப் தீட்டியதாகவும்— இவருக்கு உதவியதாகச் சந்தேகிக்கப்படும் சிலரைத் தேடிவருவதாகவும் —பொலீஸார் தெரிவித்தனர்.

## விடுமுறை கால விபத்துக்களில் 600 பேர் பலி

கேப்டவுன், டிசெ. 28

தென் ஆபிரிக்காவில், நத்தார், புதுவருட விடுமுறைக் காலத்தில் இடம்பெற்ற சாலை விபத்துக்களில் இதுவரை 600 க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர்.

விடுமுறை காலம் முடிவடைய சில நாள்கள் உள்ளதால் உயிரிழப்புகள் மேலும் அதிகரிக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது.

மது போதையில் வாகனத்தைச் செலுத்துதல் மற்றும் அதிகவேகம் போன்றவையே பெரும்பாலான சாலை விபத்துக்களுக்கு காரணம் என்று போக்குவரத்துப் பொலீசார் கூறுகின்றனர். உயிரிழந்தவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் பாதசாரிகள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# ஜெயலலிதாவின் யாகத்துக்காகப் பூங்காவில் புலி கொல்லப்பட்டதா?

## ஆந்திர அரசு விசாரணை

ஹைதராபாத், டிசெ. 28

அ. தி. மு. க. பொதுச் செயலாளர் ஜெயலலிதாவின் நன்மை கருதி நடத்தப்பட்ட யாகத்துக்காக வனவிலங்குப் பூங்காவில் இருந்த புலியைக் கொன்று இரத்தம் எடுத்துச் செல்லப்பட்டதாகத் தமிழ்ப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது குறித்து விசாரிக்க ஆந்திர அரசு விசாரணைக் குழு ஒன்றை நியமித்துள்ளது.

ஆந்திர மாநிலத் தலைநகர் ஹைதராபாத்தில் உள்ள நேரு வனவிலங்குப் பூங்காவில் கடந்த ஒக்ரோபர் மாதம் 4ஆம் திகதி 'சக்தி' என்ற புலி கழுத்து அறுக்கப்பட்ட நிலையில் இறந்து கிடந்தது.

இதற்குக் காரணமானவர்களை கண்டுபிடிக்க ஆந்திரப் பொலீசார் தீவிர முயற்சி எடுத்து வந்தனர்.

இந்த நிலையில்,

ஆந்திராவின் வாரங்கல் கிராமத்தில் உள்ள பத்திர காளி அம்மன் கோவிலில் ஜெயலலிதா ஒரு யாகம் நடத்தியதாகவும், அந்த யாகத்துக்காக, மாந்திரிகர்களின் சொற்படி 'சக்தி' என்ற புலியைக் கொன்று அதன் ரத்தத்தைக் கொண்டு யாகம் செய்யப்பட்டதாகவும்— தமிழகப் பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்தன.



ஆந்திரமுதல்வர் சந்திரபாபு நாயுடு, இந்தச் சம்பவம் குறித்து விசாரிக்க தனிக் குழு ஒன்றை அமைத்துள்ளார்.

இது தொடர்பாக ஜெயலலிதா நேற்று மூன்தினம் சென்னையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில், தன் மீது அபாண்டமான குற்றச்சாட்டை வெளியிட்ட பத்திரிகைகள் மீதுமான நஷ்ட வழக்குத் தொடரப் போவதாகக் கூறியுள்ளார்.

நேரு வனவிலங்குப் பூங்காவில் புலிகொல்லப்பட்ட காலகட்டத்தில், ஜெயலலிதாவும், அவரது தோழி சசிகலாவும், ஹைதராபாத்தில் உள்ள ஜெயலலிதாவின் பண்ணை வீட்டில் தங்கியிருந்ததாகக் கூறப்படுவது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## நத்தார் அன்று தேவாலயத்தில் குண்டு வெடிப்பு

இந்தோனேசியாவின் தலைநகர் ஜகார்த்தாவில் ரோமானிய கத்தோலிக்கத் தேவாலய வளாகத்தில் நத்தார் வழிபாட்டுச் சமயத்தின் போது குண்டு வெடித்ததில் 13 பேர் பலியாகியுள்ளனர்.

இதே சமயம் வேறு சில நகரங்களில் உள்ள தேவாலயங்களிலும் குண்டுகள் வெடித்ததாகக் கூறப்படுகிறது. (ஒ—8)

கட்சித்தாவல் தடைச் சட்டத்தின் கீழ்

## பாண்டிச்சேரிச் சட்டசபையில் 3 உறுப்பினர்கள் பதவி பறிப்பு

புதுவை, டிசெ. 28

பாண்டிச்சேரி சட்டசபையில் கட்சித்தாவல் தடைச் சட்டத்தின் கீழ் 3 உறுப்பினர்களின் உறுப்பினர் பதவிகள் பறிக்கப்பட்டன. இவர்களின் தலைவராகச் செயற்பட்ட முன்னாள் அமைச்சர் கண்ணன் பதவி பறிப்பில் இருந்து தப்பித்துக் கொண்டார்.

தமிழ் மாநில காங்கிரஸைச் சேர்ந்த மனோகர், ராஜசேகர், ஏழுமலை ஆகிய சட்டமன்ற உறுப்பினர்கள் அக்கட்சியிலிருந்து தாம் வெளியேறுவதாகவும் — தம்மைத் தனி அணியாக அறிவிக்கும் படியும் கோரி, பாண்டிச்சேரிச் சட்டசபை சபாநாயகரிடம் கடிதம் சமர்ப்பித்தனர்.

இது குறித்த ஆலோசனைகளின் பின்னர் சபாநாயகர் ஏ. வி. சுப்பிரமணியன், த. மா. காவில் இருந்து வெளியேறிய 3 சட்டமன்ற உறுப்பினர்களையும் பதவி நீக்கம் செய்வதாக அறிவித்துள்ளார்.

பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ள 3 பேரும், முன்னாள் பொதுப்பணித்துறை அமைச்சர் கண்ணனின் ஆதரவாளர்கள் ஆவர்.

அவருக்கு ஆதரவு தெரிவித்தே அவருடன் கட்சியை விட்டு 3 பேரும் விலகியிருந்தனர்.

த.மா. காவை விட்டு வெளியேறுவதாகக் கண்ணன் சபாநாயகரிடம் அதிகாரபூர்வமாகத் தெரிவிக்காததால் அவரது உறுப்பினர் பதவி பறிக்கப்படவில்லை.

ஆனால் கண்ணனை நம்பி கட்சியை விட்டு வெளியேறியவர்கள் உறுப்பினர் பதவியை இழந்துள்ளனர்.

புதுவை அமைச்சருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பிருப்பதாக பொய்யான தகவலைக் கூறியதனால் கண்ணனின் அமைச்சர் பதவி முன்னர் பறிக்கப்பட்டது தெரிந்ததே. (ஒ—8)

'போபர்ஸ்' வழக்கில் சம்பந்தப்பட்ட

## குவாட்ரோச்சி ஆயுதம் வாங்க புலிகளுக்கு உதவினாராம்

### சுப்பிரமணியசுவாமி குற்றச்சாட்டு



சென்னை, டிசெ. 28

'போபர்ஸ்' பீரங்கி பேர ஊழல் வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள இத்தாலிய ஆயுதத் தரகர் ஓட்டாவியோ குவாட்ரோச்சி விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் வாங்க உதவி வந்தார்.

இவ்வாறு இந்திய ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி குற்றஞ் சாட்டியுள்ளார்.

சென்னையில் வெளியிட்ட அறிக்கையில் இதனை அவர் தெரிவித்துள்ளார்.

'போபர்ஸ்' வழக்குத் தொடர்பாக மலேசியப் பொலீசாரால் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள குவாட்ரோச்சி,

1985 ஆம் ஆண்டு முதல் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு ஆயுதங்கள் வாங்குவதில் தீவிரமாகச் செயற்பட்டு வந்ததாகவும்—

இப்போது உள்துறை அமைச்சர் எல். கே. அத்வானிக்கு தான் எழுதியுள்ள கடிதத்தில், அந்த விவரங்களை எழுதியுள்ளதாகவும்—

சுப்பிரமணிய சுவாமி அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்.

சோனியா காந்தியின் உறவினரான குவாட்ரோச்சி, 'போபர்ஸ்' வழக்கில் எந்த விதத்திலும் சம்பந்தப்படவில்லை என்று சில ஆண்டுகளின் முன்னர் சுப்பிரமணிய சுவாமி கூறிவந்தது குறிப்பிடத்தக்கது. (ஒ-8-6)

மேற்காசியப் பிரச்சினை தொடர்பான

## பில் கிளின்ரனின் பரிந்துரைகளை ஏற்கப் பலஸ்தீனர்கள் மறுப்பு

காஸா, டிசெ. 28

மேற்காசியப் பிரச்சினைகள் தொடர்பாக, அமெரிக்க அதிபர் பில்கிளின்ரன் தெரிவித்துள்ள தீர்வுக்கான பரிந்துரைகளை பலஸ்தீனர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று பலஸ்தீனத் தலைவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

பலஸ்தீன அதிபர் யசீர் அரபாத்தின் ''பதாஹ்'' பிரிவு அதிகாரியான மர்வான் மறுகோக்கி என்பவரே இதனைக் கூறியுள்ளார்.

கிளின்ரனின் தீர்வுப்பரிந்துரைகளில் ஒன்றில் ஜெருசலேத்தின் பெரும்பகுதி இஸ்ரேலியர்கள் வசம் இருக்க வழி செய்வதாகத் தெரிவித்த மறுகோக்கி இதனை பலஸ்தீனர்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் கூறியுள்ளார்.

கிளின்ரனின் பரிந்துரைகளில், சமாதானத்தை ஏற்படுத்தத் தடையாக உள்ள அம்சங்கள் கவனத்தில் எடுக்கப்படவில்லை என்று யசிர் அரபாத் தெரிவித்துள்ளார்.

பலஸ்தீனர்கள் இந்தப் பரிந்துரைகளை ஏற்றால், தமது தரப்பும் அவற்றை ஏற்றுக்கொள்ளத் தயார் என்று இஸ்ரேலிய இடைக்காலப் பிரதமர் எகுட்பராக் கூறியுள்ளார்.

மேற்காசியப் பிரச்சினைக்கு இறுதித்தீர்வு ஒன்றை ஏற்படுத்த அமெரிக்க அதிபர் பில்கிளின்ரன் சில பரிந்துரைகளை இருதரப்பினரிடமும் வழங்கி அவை குறித்த கருத்தை இன்று தெரிவிக்கும் படிகேட்டுக் கொண்டுள்ளார்.

இதே சமயம் மேற்குக் கரையில் உள்ள நாக்லோத் நகரில் யூதக் குடியிருப்பு ஒன்றின் மீது பலஸ்தீனர்கள் தாக்குதல் நடத்தியதைதயடுத்து அங்கு மீண்டும் வன்முறை மோதல்கள் வெடித்துள்ளன.

காஸா மற்றும் மேற்குக் கரையில் இஸ்ரேலியப் படைகளுக்கும் பலஸ்தீனர்களுக்கும் இடையே கடந்த 3 மாத காலமாக நடந்து வரும் மோதல்களில் 300 பேர் வரை உயிரிழந்துள்ளனர். (ஒ-8-6)

## ஆபத்து

அதிகளவில் சூயிங்கம் மெல்லுபவர்களுக்கு, அவர்களின் பற்களில் அமைந்துள்ள ரசத்தடை உடைந்து அதில் உள்ள பாதரசம் ரத்தத்திலும், சிறுநீரிலும் கலக்கும் அபாயம் உள்ளதாக சுவீடன் நிபுணர்கள் கண்டு பிடித்துள்ளனர். (ஒ)

## துருக்கியில் 7 ஆயிரம் பேர் விடுதலை

துருக்கியில் சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட பொது மன்னிப்புச் சட்டத்தின்கீழ் 7 ஆயிரத்துக்கும் அதிகமான கைதிகள் சிறைகளில் இருந்து விடுவிக்கப்பட்டனர்.

சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள இந்தச் சட்டத்தின்கீழ், துருக்கிச் சிறைகளில் தற்போதுள்ள 72 ஆயிரம் கைதிகளில் அரைவாசிப் பேர் விடுதலையாக உள்ளதாக துருக்கிநீதி அமைச்சர் ஹிக்குமத் சமிததார் தெரிவித்துள்ளார்

# மின்சாரசபை அதிகாரிகளை மாற்றுக

## டக்ளஸிடம் பிரதேசசபைத் தலைவர் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.28
மின்விநியோகம் பெரும் பிரச்சினையாக உள்ளதால் மின்சார சபையின் மேலதிகாரிகளை மாற்றி சிறந்த சேவையாற்றக்கூடியவர்களை அந்தப் பதவிகளில் அமர்த்தி மக்களுக்கு சீரான மின்விநியோகம் கிடைக்க ஆவன செய்யும்படி வலி. மேற்குப் பிரதேச சபைத் தலைவர் என். திரிலோகநாதன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அமைச்சருக்கு அனுப்பியுள்ள கடிதம் வருமாறு:-

கடந்த ஐந்து நாள்களா வலிகாமத்தில் கூடுதலா பகுதிகளுக்கு மின்சார வியோகம் தடைப்பட்டிரு கின்றது. பாடசாலை மாணவர்கள், திணைக்களங்க மேலும் அரச சார்பற்ற நி வனங்கள் மின்வெட்டினா பெரிதும் பாதிப்படைந்து ளன. மின்சார சபையின பாரபட்சமான ரீதியில் மின்னிணைப்பு வழங்கியுள்ளமையையும் தங்களின் மேலான கவனத்திற்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். மின்வெட்டு அமுலில் உள்ளபோது 3001 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அறிவித்தபோது சரியான ரீதியில் பதில் அளிக்கப்படுவதில்லை.

தற்பொழுது ஏற்பட்டுள்ள மினி சூறாவளியால் மேலும் மின் இணைப்புக்கள் பாதிக்கப்பட்டுள்ளது. இது விடயமாக தாங்கள் மேலான கவனத்திற்கெடுத்து இப் பிரச்சினை தொடரான பிரச்சினையாக இருப்பதால் மின்சார சபையின் மேலதிகாரிகளை மாற்றி சிறந்த சேவையாற்றக்கூடியவர்களை அப்பதவியில் அமர்த்தி மக்களுக்கு சீரான மின்விநியோகம் கிடைப்பதற்கு ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன் — என்றுள்ளது.

(இ-3)

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள்

### அமரர் நாகமுத்து சண்முகநாதன்

நிகழும் விக்கிரம வருஷம் 14 ஆம் நாள் (29- 12- 2000) வெள்ளிக்கிழமை காலை 8. 30 மணியளவில் நல்லூர் சிவன் ஆலயத்தில் ஸ்ரீ கைலாசநாத சுவாமிக்கு நடைபெறும் அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகி மதிய போசன விருந்துடன் நிறைவுற உள்ளது.

அவ்வமயம் அன்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு பணிவன்புடன் அழைக்கின்றேன்.

நன்றி.

ச. ஒங்காரரூபி
(மகள்)

529, பலாலி வீதி,
திருநெல்வேலி. (82187)

## மரண அறிவித்தல்கள்

### செல்வி கந்தன் இராஜேஸ்வரி

(சமுர்த்தி உத்தியோகத்தர், சாவகச்சேரி)

கைதடி மத்தி குமரநகரை நிரந்தர முகவரியாகவும், அளவெட்டி கும்பளாவளைப் பிள்ளையார் கோயிலடியைத் தற்காலிக முகவரியாகவும் கொண்ட கந்தன் இராஜேஸ்வரி நேற்று (27-12-2000) புதன்கிழமை அகால மரணமடைந்து விட்டார்,

அன்னார் கந்தன் - இலட்சுமி தம்பதியினரின் இளைய புதல்வியும் புவனேஷ்வரி, விக்கினேஸ்வரன் (அலுவலகப் பணியாளர், கைதடி, முத்துக்குமாரசுவாமி வித்தியாலயம்). நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் கணேசன், உருத்திரன், அஜித்தா ஆகியோரின் மைத்துனியும் கலாநிதி, சுகன்யா, தயாநிதி, வக்ஷன், அனுஜா, தர்ஷன் ஆகியோரின் சிறியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(28-12-2000) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
ச. விக்கினேஸ்வரன்

நிரந்தர முகவரி:
கைதடி மத்தி.
தற்காலிக முகவரி:
கும்பிளாவளைப் பிள்ளையார் கோயில் வீதி,
அளவெட்டி தெற்கு, அளவெட்டி. (82205)

### சின்னத்துரை பத்மநாதன்

யாழ்ப்பாணம் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னத்துரை பத்மநாதன் (ஓய்வு பெற்ற உதவி முகாமையாளர், இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்.) நேற்று (27-12-2000) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சின்னத்துரை-சேதுப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரரும் காலஞ்சென்ற சரஸ்வதி (ஓய்வுபெற்ற ஆசிரியை, யாழ். பெரியபுலம் மகா வித்தியாலயம்) அன்புக் கணவரும், பத்மலதாவின் (U.N.H.R.) பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற புவனேஸ்வரி, சத்தியபாலதேவி, காலஞ்சென்ற சரஸ்வதி அம்மா, கணேசமூர்த்திநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற ரெட்ணதுரை, காலஞ்சென்ற செல்வத்துரை, செல்வரெட்ணம், நாகேஸ்வரி, பரமலிங்கம், பரராஜசிங்கம், பராசக்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ரெட்ணகுமாரி, ஜெயக்குமாரி, சத்தியகாந்தன், சிவதொண்டன், ராஜாத்தி, செல்வக்குமாரி, செல்வகுமார், விஜித்தா, சுமித்தா, நர்மதா, யசோதா ஆகியோரின் பாசமிகு மாமாவும், விக்னேஸ்வரன், விமலேஸ்வரன், சக்திராஜ் ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(28-12-2000) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காகப் பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
ப. பத்மலதா
(மகள்)

12, மணிக்கூட்டு ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (82204)

## முறைப்பாடு

யாழ்ப்பாணம், டிசெ 28
அச்சுவேலிப் பகுதியில் கடந்த 20ஆம் திகதி தொடக்கம் இளைஞர் ஒருவர் காணாமல் போய் விட்டார் என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நேற்று உறவினர்களினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த குணரத்தினம் ரஞ்சித் (வயது 22) என்பவரே இவ்வாறு காணாமல் போனவராவார். (இ-5-6)

## மீனவருக்கு கொடுப்பனவு

யாழ்ப்பாணம், டிசெ. 28
நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் மீனவ நிவாரணம் பெறுவதற்கு பதிவு செய்தவர்களை நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பிரதேச செயலகத்தில் சமுகம் தந்து கொடுப்பனவைப் பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது.

மக்கள் வங்கி அதிகாரிகள் நேரில் வந்து இந்தக் கொடுப்பனவை வழங்குவர்.

பதிவு செய்தவர்கள் தமது அடையாள அட்டை மற்றும் பங்கீட்டு அட்டையுடன் சமுகம் தருமாறு பிரதேச செயலர் க. குணராசா கேட்டுள்ளார். (இ-3)

## நயினாதீவில் மருத்துவ பரிசோதனை

யாழ்ப்பாணம், டிசெ.28
தீவக லயன்ஸ் கழகமும் கொக்குவில் லயன்ஸ் கழகமும் இணைந்து பாடசாலை மாணவர்களுக்கான விசேட மருத்துவப் பரிசோதனைகளை யாழ். மருத்துவபீட மாணவர்களின் உதவியுடன் நயினாதீவு மகாவித்தியாலயத்தில் இன்று காலை 9 மணி தொடக்கம் 2 மணி வரை நடத்தவுள்ளன.

இந்த மருத்துவ பரிசோதனையின் போது இரத்தஅமுத்தம், சலரோகம், வாயப் புற்று நோய், கண் பரிசோதனை மற்றும் பொது மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு ஆலோசனைகளும் வழங்கப்படவுள்ளதால் அனைவரையும் கலந்து பயன் பெறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-6)

## வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

இம்மாதம் 26 ஆம் திகதி வரை பயண அனுமதி வழங்கப்பட்டோர் விவரம்:-

சங்கானை

(163955ஏ), (169946ஏ), (169946பி), (170144ஏ), (170324ஏ), (170324பி), (172902ஏ), (172902பி), (172902சி), (174921ஏ), (174921பி), (175077ஏ), (170303ஏ), (170336ஏ), (173019பி), (173019டி), (173098பி), (174870பி), (174937ஏ), (174990பி), (174990டி), (174991பி), (175131ஏ), (170303பி), (173019ஏ), (173019சி), (173098ஏ), (174870ஏ), (174874ஏ), (174990ஏ), (174990சி), (174991ஏ), (175020ஏ), (175193ஏ),

யாழ்... (175297ஏ) ... 740ஏ), (1...

## ஆசிரியர்களாக நியமனம்

யாழ். கல்வி வலயத்தில் தமிழ்மொழி மூல தகுதிகாண் ஆசிரியர்களாக 15 பேர் நியமனம் பெறுகின்றனர்

நியமனம் பெறவிருப்போர் தமது நியமனக் கடிதங்களை நாளை வெள்ளிக்கிழமை யாழ். வலய அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

நியமனம் பெறுபவர்களின் விவரம் வருமாறு:-

★ அருள்மணி அருள்நாயகம்— 25, புதிய வீதி, கொய்யாத்தோட்டம்;
★ மாதவராசா பத்மராஜா — பழைய வீதி, ஆறுகால்மடம்;
★ நாகராஜா பத்மராஜா —புதுவீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
★ தேவிகா இராஜலிங்கம் —10ஏ,வைமன் வீதி, நல்லூர்.
★ திவ்வியா சிவலிங்கம்— 78, கலட்டி அம்மன்வீதி, வண்ணார்பண்ணை.
★ ஸ்ரீதரன் உமாச்சந்திரன் —மணியகாரன்வீதி, கொக்குவில் மேற்கு.
★ பொன்னம்பலம் சாந்தநாயகி— 465, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
★ மரியதாஸ் ஆன்மொனிக்கா—சிவராசா அவனியூ, பலாலி வீதி, திருநெல்வேலி.
★ வித்தியா நமசிவாயம்— வளர்மதி திரு வீதி, உரும்பிராய் வடக்கு
★ ஜெயானி இராசகோபாலு— ஞானவைரவர் வீதி, உரும்பிராய் கிழக்கு.
★ மஞ்சுளா திருச்செல்வன் - இராஜவீதி, கோப்பாய் வடக்கு.
★ சுந்தரலிங்கம் பிரதீபா— அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.
★ துரைராசசிங்கம் யசோதை—பாடசாலை வீதி, இடைக்காடு.
★ கனகசபை பிரபாகரன் — சரவணபவானந்த வித்தியாலய வீதி, கோப்பாய்.
★ குமாரசாமி கேதீஸ்வரன் — 533ஏ, பலாலி வீதி, திருநெல்வேலி; (3)


## இரண்டு ஆண்டுகள் நிறைவில்

### வேணுகா கொமினிகேசன்

கே. கே. எஸ். வீதி, நாச்சிமார் கோயிலடி.

எமது தொலைத்தொடர்பு சேவை நிலையம் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் பூர்த்தியாவதை முன் இட்டு இன்றைய தினம் (28—12—2000) உள் வரும் அனைத்து அழைப்புக்களுக்கும் கட்டணம் அறவிடப்படமாட்டாது.

அத்துடன் வெளி அழைப்புக்கள் அனைத்திற்கும் அரைக்கட்டணம் அறவிடப்படும் என்பதை அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மிகவும் மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

எமது ஏனைய சேவைகள்

- போட்டோ பிரதி எடுத்தல்
- FAX சேவை
- வீடியோ பிரதிகள் வாடகைக்கு வழங்குதல்

T. P. No. 021 - 2845
021 - 2541

– உரிமையாளர்

(சி/14511)



இன்று ! மாலை !

## திருமறைக் கலாமன்றம்

நடத்தும்

### "ஒளி விழா"

காலம்:- 28 - 12 - 2000 இன்று
நேரம்:- பி. ப. 5. 30 மணி
இடம்:- மன்ற அரங்கு

சிறப்பு நிகழ்ச்சி

"குடிலின் கானங்கள்"
(காட்சியுடனான இசை நிகழ்வு)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பொதுச் செயலாளர்
திருமறைக் கலாமன்றம்

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (சி/14507)

# யுத்தத்துக்கு முடிவு காண அரசு உறுதியுடன் செயற்படுகிறது

## ஜனாதிபதி நத்தார் செய்தி

கொழும்பு,டிசெ.28

கடந்த பல தசாப்தங்களாக எமது நாட்டின் வளங்களையும், மானிட விழுமியங்களையும் அழித்து நாசமாக்கும் திட்டத்தினால் நாம் மிகவும் சலிப்படைந்துள்ளோம். இந்தக் கொடூர யுத்தத்தில் உயிர்த் தியாகம் செய்பவர்கள் எமது சகோதர சகோதரிகளே. இந்த யுத்தத்திற்கு முடிவு காண அரசாங்கம் உறுதியுடன் செயற்படுகிறது.

மேற்கண்டவாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது நத்தார் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யுத்தம் மிகக் கொடூரமானது அதனால் அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அந்தக் கொடிய யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த அரசாங்கம் உறுதியுடன் செயற்படுகிறது.

சமாதானம், சகோதரத்துவம், சகவாழ்வுச் செய்தியை பூலோகத்தில் பரவச் செய்த இன்றைய நத்தார் தினத்தில் அந்த உன்னத குறிக்கோளை இந்நாட்டில் வாழும் மக்களுக்கு சமாதானத்தினதும், அன்பினதும் நல்வாழ்த்துக்களை இதனால் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கோடிக்கணக்கான கிறிஸ்தவர்கள் யேசுக் கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடும் நத்தார் தினத்தில் நாம் பண்பாடுள்ள சமுதாயமாக ஏனைய சமூகத்தவர்களின் உரிமைகளுக்கும் கலாசாரத்துக்கும் மதிப்பளிக்க வேண்டும். அதற்கான உண்மையான மானிடப் பண்புகளை வளர்த்துக்கொள்ளவேண்டும். இதனை உறுதி செய்ய மற்றுமொரு நல்ல சந்தர்ப்பம் உதயமாகியுள்ளது

நாம் எதிர்பார்த்துள்ள சமாதான சகவாழ்வினை ஏற்படுத்திக் கொள்ள உன்னதமான எதிர்பார்ப்பு நிறைவேறும் யதார்த்த சூழ்நிலையை நெருங்கிக் கொண்டிருக்கின்றோம்.

இப்படித் தெரிவிக்கப்பட்டது.

(இ-8)

# தென்மராட்சி மக்களின் நிவாரணம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்

## பளைப் பிரதேச சபை தீர்மானம்

பளைப் பிரதேச மக்கள் தமது சொந்த இருப்பிடங்களுக்குத் திரும்பும் வரை இடம் பெயர்ந்தோர் உலர் உணவு நிவாரணம் அவர்களுக்கு தொடர்ந்து வழங்கப்பட வேண்டும் தற்போது பிரதேச செயலகங்களால் மேற கொள்ளப்படும் நிவாரணம் பெறுவோர் பற்றிய மீளாய்வினை இடம் பெயர்ந்த தென்மராட்சி மக்களுக்கு அமுல்படுத்தக்கூடாது.

வடக்கு புனர்வாழ்வு அமைச்சரையும், யாழ்.அரச அதிபரையும் இவ்வாறு கோருவதென பளைப் பிரதேச சபை தீர்மானித்துள்ளது.

நேற்று முன்தினம் பளைப் பிரதேச சபைத் தலைவர் வே.குணரத்தினம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ம-117)

RED OINTMENT
சிவப்பு நெய்
(சிவப்பு புண் களிம்பு)
நீர்ச்சிரங்கு முதல் தோலில் ஏற்படும் பல்வேறு வகையான அழற்சிகளையும் சிறு புண், அவியற் புண்கள் (EXIMA),
படுக்கைப் புண்களையும் (Bed Sores)
(Exept Diebetic Gangrene) மாற்றவல்லது.
எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.
GABRIEL EDWARD DISPENSARY
24, BUS STAND, JAFFNA. (82201)

"எல்லோருக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறோம்"
நத்தார் பண்டிகை - 2000
நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு
கானான் ஜெப ஆலயம்
வழங்கும்
ஒளிவிழா நிகழ்ச்சிகள்
* இன்னிசை கானங்கள்
* கண்ணுக்கினிய நடனங்கள்
* எழுச்சியூட்டும் நாடகங்கள்
* பார்க்கப் பரவசமடைய இன்னும் பல நிகழ்ச்சிகள்

| காலம் | நடைபெறும் இடங்கள் |
|---|---|
| 28.12.2000 | 32, கல்லூரி வீதி, வட்டுக்கோட்டை. |
| 29.12.2000 | அந்தோனியார் கோயில் முன் ஒழுங்கை, குறிச்சி பத்தானை, அச்சுவேலி வடக்கு. |
| 30.31.12.2000 | இருபாலை, கோப்பாய். |
| 01.01.2001 | 202/3, கச்சேரி நல்லூர் வீதி, சுண்டிக்குழி. |
| 02.01.2001 | வவுனரவத்த, தெல்லிப்பழை. |
| 03.01.2001 | நாகம்மாள் கோயில் வீதி, உடுவில். |

நேரம் :- மாலை 3.00 மணி
"யாவும் இலவசம்' யாவரும் திரண்டு வருக!!"
"அவர் நாமம் அதிசயமானவர்.... ஏசா:9:6"
கானான் ஜெப ஆலயம்
இருபாலை, கோப்பாய்.
(C/14510)

## புலிகள் ஐவர் உயிரிழப்பு

இரண்டு வெவ்வேறு சம்பவங்களில் படையினருடன் இடம்பெற்ற மோதல்களில் தமது தரப்பில் உயிரிழந்த ஐவரின் பெயர் விவரங்களை விடுதலைப் புலிகள் 'புலிகளின் குரல்' வானொலி மூலம் அறிவித்தனர்.

அவர்களின் விவரம் வருமாறு:-
கடந்த 22 ஆம் திகதி கைதடிபகுதியில் இடம்பெற்ற மோதலில் நாவரசி (ஆறுமுகம் பவளராணி) என்பவரும்

கடந்த 20 ஆம் திகதி அம்பாறையில் படையினருடன் ஏற்பட்ட மோதலில் 2ஆம் லெப்ரினன்ட் ரோகவரன் (கனகசபை குகேந்திரன், மட்டக்களப்பு), வாகவரன்(நடராஜா தேவராஜா, மட்டக்களப்பு), 2 ஆம் லெப்ரினன்ட் விழிமேனன் (மாணிகவாசகம் ராஜரூபன், மட்டக்களப்பு), கப்டன் ராஜ்குமார் (மனோகரன் தவராசா,மட்டக்களப்பு) ஆகியோருமே உயிரிழந்தவர்களாவர். (ஐ-8)

## சாரணியர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.28

சிரேஷ்ட சாரணியர்கள், வழிகாட்டுநர்கள் ஆகியோருக்கான கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் உள்ள யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## வெளிமாவட்டம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயணச் சீட்டு பெறுவதற்கான அறிவுறுத்தல்கள் குறித்து அவர் விடுததுள்ள அறிக்கை வருமாறு:-

### பாதுகாப்பு அனுமதி

வழமைபோல் பாதுகாப்பு அனுமதி பெறப்படல் வேண்டும். இராணுவ சிவில் அலுவலகத்தினரால் இவ்வாறு பாதுகாப்பு அனுமதி பெற்றவர்களின் விவரம் பயணச்சீட்டு வழங்கும் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதும் மக்களின் பார்வைக்காக இந்த விவரம் பயணச்சீட்டு வழங்கும் அலுவலகம் உட்பட சகல பிரதேச செயலாளர் அலுவலகங்களிலும் உள்ளூராட்சி சபை அலுவலகங்களிலும் வைக்கப்படும்.

### பயணச்சீட்டு

பாதுகாப்பு அனுமதி பெற்றுக் கொண்டோர் கப்பலில் அல்லது விமானத்தில் பயணம் செய்ய முன்கூட்டியே ஆசனங்களைப் பதிவு செய்து கொள்ளலாம்.

அதற்கு ஏப்ப பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தினைப் பெற்றுக் கொண்டதற்கான பற்றுச்சீட்டினை பயண அனுமதிக்கான பயணச்சீட்டு வழங்கும் அலுவலகத்தில் ஒப்படைத்து தமது பயணத்துக்கான ஒழுங்குகளை சீர் செய்துகொள்ளவேண்டும்.

பயணச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்வோர் தேசிய அடையாள அட்டை அல்லது விசேட அடையாள அட்டை மூலம் தங்கள் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும்.

குடும்பமாகப் பயணம் செய்பவர்கள் பிரயாணச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்வதற்கு பாதுகாப்பு அனுமதி விவர நிரலில் பெயருள்ள குடும்ப அங்கத்தவர் ஒருவர் ஏனையோரது அடையாள அட்டையுடன் வந்து பயணச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

### முன்னுரிமை

பயணிகளின் அவசரப் பயணம் கருதி அவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் பயணச் சீட்டுக்கள் வழங்குவதில் முன் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மரண வீடுகளுக்குச் செல்வோர், நோயாளர்கள், நேர்முகப் பரீட்சைக்கு வடக்கிற்கு வெளியே பயணம் மேற்கொள்ள வேண்டியவர்கள், அரச ஊழியர்கள், பொருள்கள் கொள்வனவு செய்ய கொழும்பு சென்று வரும் வர்த்தகர்கள், வெளிமாவட்டத்தைச் சேர்ந்தோர்கள், உள்ளூர் வெளியூர் வேலைவாய்ப்புப் பெற்றுச் செல்வோர் மற்றும் பொதுஸ்தாபனங்கள் தகுந்த ஆவணங்களைச் சமர்ப்பித்து முன்னுரிமை அடிப்படையில் பயணச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ள முடியும். மேற்படி பயணச் சீட்டுக்கள் வழங்குவது தொடர்பாக மக்கள் தங்கள் கருத்துக்கள் மற்றும் முறைப்பாடுகளை பயணச் சீட்டு வழங்கும் அலுவலகத்தில் உள்ள முறைப்பாட்டுப் பெட்டியில் சமர்ப்பித்துக் கொள்ளலாம். பயணச் சீட்டுக்கள் வழங்கும் பணிக்கு மக்களை ஒத்துழைக்கும் படியும் வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபை கேட்டுக் கொள்கிறது.

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-3)

# இதய அஞ்சலி

Rtn. பத்மலதா பத்மநாதன்
அவர்களின் அன்புத் தந்தை

## சின்னத்துரை பத்மநாதன்

அவர்கள் 27.12.2000 அன்று அமரரானார்

அன்னாரின் ஆத்மாசாந்தி அடைய இறைஞ்சுவதுடன் Rtn.பத்மலதா பத்மநாதன் அவர்களின் துயரில் நாமும் இணைந்து கொள்கின்றோம்

*யாழ்ப்பாணம்.* (C/14508) யாழ்.றோட்டறிக் கழகம்.

# கண்ணீர் அஞ்சலி

எம்முடன் பயிலும் 3ஆம் வருட நடனத்துறை மாணவி
செல்வி சசிரஜனியின்
அன்புத் தந்தையார்

## திரு.சிவானந்தம்

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுவதோடு அன்னாரின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

இராமநாதன் நுண்கலைக் கழகம்,
யாழ்.பல்கலைக்கழகம்.
சகமாணவர்கள் (C/14506)

# இதய அஞ்சலி

அருணனின்
அன்புத் தாயார்

## லிங்கப்பிள்ளை நாகேஸ்வரி

(யோகா)

அவர்கள் (25-12-2000) திங்கள் அன்று அகால மரணமடைந்ததையிட்டு ஆழ்ந்த அனுதாபங்களைத தெரிவித்துக் கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*சீனிவாசகம் றோட்,*
*கொட்டடி.* (82194) - நண்பர்கள்-

# மரண அறிவித்தல்கள்

## இரத்தினம் கனகராசா

(திருநெல்வேலி)

கடந்த 24ஆம் திகதி காலமான திருநெல்வேலி பத்திரகாளி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் தற்பொழுது திருகோணமலையில் வசித்து வந்தவருமான ஓவியமணி இரத்தினம் கனகராசா (ராஜி ஆட்ஸ்) அவர்களின் இறுதிக் கிரியைகள் இன்று (28.12.2000) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்குத் திருகோணமலையில் நடைபெறும்.

தகவல்
இ.நித்தியானந்தன்
(சகோதரன்)
(C/14509)

## கந்தையா சுந்தரம்

சரவணையை பிறப்பிடமாகவும், தற்போது வவுனியா தோணிக்கல்லை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய கந்தையா சுந்தரம் அவர்கள் காலமாகிவிட்டார்.

அன்னார் நகுலாம்பிகையின் அன்புக்கணவரும்,பேரின்பநாயகம், தெய்வேந்திரம்பிள்ளை, விஜயலட்சுமி, பஞ்சலிங்கம் (மக்கள் வங்கி,ஸ்ரான்லி வீதி), கலைச்செல்வன்(மலேசியா), சதானந்தராசா (மலேசியா) ஆகியோரின் அன்புத்தந்தையும், பூமணி, மதி, ராஜலிங்கம், மஞ்சுளாதேவி (பாடசாலை பற்சிகிச்சை நிலையம்), தமிழ்மலர் ஆகியோரின் மாமனாருமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (2000/12/27) புதன்கிழமை வவுனியாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*அராலி வடக்கு,*
*அராலி.* (82193)
தகவல்:
சு.பஞ்சலிங்கம்
(மகன்)

## உக்கிரப்பெருவழுதிப்பிள்ளை

யாழ்.பல்கலைக்கழக நுண்ணுயிர்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் வைத்திய கலாநிதி உக்கிரப்பெருவழுதிப்பிள்ளை அவர்கள் 23.12.2000 அன்று காலமானார்

அன்னார் காலஞ்சென்ற இராமநாதபிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியர்) செல்வரதி தம்பதியினரின் புதல்வனும் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த துரையசிங்கம் (ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்), மங்கயர்க்கரசி தம்பதியினரின் மருமகனும், வைத்திய கலாநிதி கலைவாணி (புற்றுநோய் வைத்திய நிபுணர் மகரகம) அவர்களின் அன்புக் கணவரும், பானுகோபன் (மருத்துவபீடம் - கொழும்புப் பல்கலைக்கழகம்), பாரத் உமாசங்கர் (பொறியியல்பீடம் - மொரட்டுவ பல்கலைக்கழகம்), செந்தூரன் (கொழும்பு இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தும்பளையில் 24.12.2000 அன்று நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

***C 33G2,***
*சொய்சாபுர தொடர்மாடி வீடு,*
*மொரட்டுவ.*
***T.P.**605433*
(82193)
தகவல்:
வைத்திய கலாநிதி
திருமதி வாணிபிள்ளை.

## மிருசுவில் படுகொலைகள்

# அடையாளம் காட்ட முடியும் என்கிறார் தப்பி வந்தவர்

என்னுடன் விறகு வெட்டவந்த வர்களைப் படுகொலை செய்தவர் களை என்னால் அடையாளம்காட்ட முடியும் என்று மிருசுவிலில், இடம் பெற்ற படுகொலைச் சம்பவங்களை நேரில் பார்த்து பின்னர் தப்பிவந்த பொ.மகேஸ்வரன் கூறினார்.

பி.பி.ஸி. தமிழோசைக்கு நேற்று அவர் அளித்த பேட்டியிலேயே இதனைத் தெரிவித்தார்.

சம்பவம் இடம்பெற்ற அன்று நாம் விறகு வெட்டச் சென்ற சமயம் ஒரு புதைகுழி ஒன்றைப் பார்த்த போது படையினரால் கைது செய்யப்பட்டோம். எம்மில் சிலரை அவர்கள் மலக்குழி ஒன்றினுள் வைத்துக் கொன்றதை என்னால் ஊகிக்க முடிந்தது. இரத்தச் சேற்றை நான் நேரில் கண்டேன்.

என்னைக் கண்ணைக் கட்டித் தாக்கியதில் மயக்கமுற்றேன். மயக்கத்தால் எழுந்த என்னை திரும்பவும் கண்ணைக்கட்டித் தாக்கமுற்பட்டனர். அப்பொழுது படையினரிடமிருந்து தப்பி வேலி பாய்ந்து ஓடி வந்தேன். என்னைச் சிப்பாய் ஒருவர் கலைத்து வந்தார். ஆயினும் அவர் வேலிக்கம்பி ஒன்றில் தடக்கி வீழ்ந்து விட்டார். என்னைச் சுடுவதற்கு அவர் முற்படவில்லை.

இப்படி அவர் கூறினார். (இ-8)

## திகதி மாற்றம்

யாழ். பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தினரால் நெல்லியடி ராஜலக்ஷ்மி திரையரங்கில் இன்று (28.12.2000) வியாழக்கிழமை ஏற்பாடு செய்திருந்த இன்னிசை விருந்து தவிர்க்கமுடியாத காரணத்தால் 30.12.2000 ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.

வணிக மாணவர் மன்றம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(82170)

## அவசர கலந்துரையாடல்

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவத்துறை இறுதிவருட, மூன்றாம் வருட மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் 29.12.2000 (வெள்ளி) காலை 11.00 மணிக்கு முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது. எனவே அனைத்து மாணவர்களையும் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

முகாமைத்துவ மாணவர் மன்றம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(82188)

## கண்ணீர் அஞ்சலி

யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் கல்வி கற்பிக்கும் திருமதி கலாநிதி ஸ்ரீமுருகதாஸ் அவர்களது அன்புக் கணவரான

**சி.ஸ்ரீமுருகதாஸ்** அவர்களின்

திடீர் மறைவையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
அபிவிருத்திச்சபை உறுப்பினர்கள்,
யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை.

*சதாபொன்ஸ்,*
*மாலுசந்தி,*
*அல்வாய்.*

(C/14512)

## நிரு ரியூசன் சென்ரர்

கோண்டாவில்

**A/L 2003**

கலை, வர்த்தக, கணித வகுப்புக்கள்

*ஆரம்பம்:* 07.01.2001
ஞாயிறு 8.00 மணி

*அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.* (82183)

## O/L எடுத்தவர்களுக்கான புதிய பிரிவு ஆரம்பம்

03-01-2001
பி.ப. 4.00 மணி

**OXFORD ENGLISH ACADEMY**

சுப்பர் மடம் - பருத்தித்துறை

**BY: MR.B.JOTHY**

குறிப்பு: எனது வகுப்புக்கள் பின்வரும் இடங்களிலும் நடைபெறுகின்றன.

| | | |
|---|---|---|
| MATHS CENTRE | - | நெல்லியடி. |
| BECON | - | உடுப்பிட்டி. |
| N.C.A | - | 1ஆம் கட்டை. |
| MODERN COMMERCE | - | தும்பளை. |

ஆகிய இடங்களில்.
அனுமதியை உரிய கல்வி நிறுவனத்தில் முற்கூட்டியே பெறவும். (82040)

## மிருசுவில் கொலைகள் மரண விசாரணை இன்று

வடமராட்சி,டிசெ.28

மிருசுவில் வடக்கில் இடம்பெற்ற சம்பவத்தில் பலியான எட்டுப்பேரின் மரண விசாரணைகள் பருத்தித்துறையில் இயங்கும் சாவகச்சேரி நீதிமன்றில் சாவகச்சேரி நீதிவான் அன்னலிங்கம் பிரேம்சங்கர் முன்னிலையில் இன்று நடைபெறவுள்ளன.

மரண விசாரணையின் போது கொடிகாமம் பொலீஸார் சாட்சிகளை ஆஜர் செய்வர். (இ-173)

## மகரகம செல்லும் நோயாளர் கவனத்துக்கு!

யாழ்ப்பாணம்,டிசெ.28

செஞ்சிலுவை சர்வதேசக் குழுவினரின் உதவியுடன் கொழும்பு மகரகம வைத்தியசாலைக்கு மேலதிகச் சிகிச்சை பெறச் செல்லவுள்ள நோயாளர்களையும் அவர்களது உதவியாளர்களையும் நாளை வெள்ளிக்கிழமை வைத்தியசாலைப் பணிப்பாளருடன் தொடர்பு கொள்ளுமாறு பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

சிவில் நிர்வாகக் கரியாலயத்தில் அனுமதி பெற்ற நோயாளர்களில் முதற்தடவையாக பதிவுகளை மேற்கொண்டவர்களையும் உதவியாகச் செல்ல இருப்பவர்களையுமே நாளை சந்திக்குமாறு கோரப்பட்டுள்ளது. (இ-6)

## ஜயந்தி தினம்

யாழ்ப்பாணம்,டிசெ.28

ஸ்ரீ ரமண பகவானின் 122 ஆவது ஜயந்தி தினம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 10.30 மணி முதல் உடுவில் கிழக்கு கடவுள் சந்நிதியில் ஜோதிட நூலாசிரியர் தசத்தியதாசன் தலைமையில் அனுட்டிக்கப்படவிருக்கின்றது.

திருவாசகம் ஓதல், பூஜைகள், ஆராதனைகள் என்பன அங்கு இடம் பெறும். (இ-3)

## பயணத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மணியம் கட்டடத்தில் இயங்கும் பயணச்சீட்டு அலுவலகத்திற்கு வருமாறு வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபை (றாள்) யாழ். அலுவலக பயண ஏற்பாட்டுக்கான இணைப்பாளர் கந்தையா பரராஜசேகரம் கேட்டுள்ளார்.

பயணத் திகதியை உறுதி செய்து பயணப் பத்திரத்தைப் பெறுமாறும் அவர் கோரியுள்ளார்.(இ-3)

## காங்கேசன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காங்கேசன்துறையில் வைத்து மேற்கொள்ள முயற்சி எடுக்கப்பட்டிருந்தது.

இது விடயமாக விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகள் பேச்சு நடத்தி வந்தனர். இந்தப் பேச்சுக்களை அடுத்து காங்கேசன்துறைத் துறைமுகத்தைப் பயன்படுத்த புலிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர் என்றும் -

இதனைத் தொடர்ந்து காங்கேசன்துறையில் இந்தப் பணிகளை மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் - செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த இணக்க நிலையை அடுத்து நோயாளர் கப்பல் சேவை எதிர்வரும் 3 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

அதேசமயம் - 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பல் திருத்த வேலைகளுக்கு நாளை கொழும்பு செல்லவுள்ளதாகவும் -

திருத்த வேலைகள் பூர்த்தியடைய இரு வாரங்கள் செல்லலாம் என்றும் -

அதன் பின்பே சேவைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் - மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## A/L 2003

(கலை,வர்த்தகப் பிரிவுகள்)

**ஆரம்பம்:**

ஜனவரி 06

காலை 8.00 மணி

**DMI**
யாழ்நகர்.

(81294)

# பல்கலையில் பகிஷ்கரிப்பு

யாழ். பல்கலைக்கழக நடவடிக்கைகளில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள விஞ்ஞானபீட மாணவர்கள் நால்வரை மீண்டும் பல்கலைக்கழக செயற்பாடுகளில் இணைக்குமாறு கோரி அந்தப் பீடத்தைச் சேர்ந்த மாணவர்கள் நேற்று வகுப்புக்களைப் பகிஷ்கரித்தனர்.

விஞ்ஞான பீடத்தின் முதலாம் வருட மாணவனான இ.ஷாஜகான் தாக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து எட்டு மாணவர்கள் பல்கலைக்கழக செயற்பாடுகளில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்தனர்.

விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த சிவகுமார், மதன், மதிமாறன், கேசவன் ஆகியோர் பல்கலைக்கழக நடவடிக்கைகளிலிருந்து ஒரு வருட காலத்துக்கும் -

கலைப் பீடத்தைச் சேர்ந்த உதயணன், மருத்துவ பீட மாணவர்களான றொபின்சன், வீரசுதன் ஆகியோர் பல்கலைக்கழக நடவடிக்கைகளிலிருந்து ஒரு மாத காலத்துக்கும் -

விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த ஷாஜகான் பல்கலைக்கழக நடவடிக்கைகளில் இருந்து மூன்று மாத காலத்துக்கும் இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்தனர்.

இவர்களில் கூடுதல் காலத்துக்கு இடை நிறுத்தப்பட்ட நான்கு மாணவர்களையும் மீள் செயற்பாடுகளில் இணைத்துக் கொள்ளுமாறு கோரியே நேற்றைய போராட்டம் இடம்பெற்றது. (இ-5-6-8)

## BARATHY

சித்தன்கேணி

**A/L 2003**

கலை, வர்த்தகம்

ஆரம்பம்: 06.01.2001 சனிக்கிழமை

| | | |
|---|---|---|
| பொருளியல் | - | சண் |
| வணிகக்கல்வி | - | பசில் |
| கணக்கீடு | - | முகுந்தன் |
| அளவையியல் | - | R.P.சர்மா |
| தமிழ் | - | பாலா |
| இந்துநாகரிகம் | - | பாலா |
| புவியியல் | - | குமரன் |
| நாடகமும் அரங்கியலும் | - | சுதன் |
| கிறிஸ்தவம் | - | ரவீந்திரன் |
| விவசாயம் | - | பிரபல ஆசிரியர் |
| ஆங்கிலம் | - | விஜயபாஸ்கர் |

அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

குறிப்பு: கலை, வர்த்தக வகுப்புகளுக்கு சித்தன்கேணியில் தனித்துவம் பெற்ற ஒரே ஒரு நிறுவனம் இது மட்டுமே! (82032)

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை கோவிந்தசாமி

(செல்லப்பாக்கியம்)

அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், அரியாலை மேற்கு 16, நொத்தாரிசு வீதியில் வசித்தவருமாகிய வேலுப்பிள்ளை கோவிந்தசாமி நேற்று (27.12.2000) புதன்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - சிவகாமி ஆகியோரின் மூத்த மகனும் காலஞ்சென்ற கந்தையா - கோணமணி ஆகியோரின் மருமகனும் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் பாலசண்முகம், மகேசன்(அதிபர், உருத்திபுரம்), வேதநாயகம்(லிகிதர், இ.போ.சபை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் விவேகானந்தன்(பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ்.மாநகரசபை), வேல்நாதன்(சுவிஸ்), தவநாதன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் காலஞ்சென்ற கதிரவேலு ரத்தினம் மற்றும் நடேசு தவமலர், பா.நாகரத்தினம், ம.புனிதவதி, வே.பரிமளகாந்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும் மகேந்திரமலர், கோசலா(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சந்திரிக்கா, நிவேதிகா, கிருவரன், விஸ்விதன்(சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2000) வியாழக்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பங்கு வேம்படி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

*'கோகுலம்',*
*மனோகரா,*
*அல்வாய்.*

(C/14513)

### செல்லையா இளையதம்பி (சாமியப்பா)

(முன்னாள் 'செல்வச்சந்நிதி விமானம்' லொறி உரிமையாளர்)

துவாளி வீதி உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா இளையதம்பி அவர்கள் 22.12.2000 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி சிதம்பரி செல்லையா அவர்களின் கனிஷ்ட புதல்வனும் சோதியம்மாவின் அன்புக் கணவரும் கமலேஸ்வரி, இராஜலிங்கம்(ஜேர்மனி), தவராசா(லச்சு), செல்லையா(ஜேர்மனி), தனலஷ்மி, காலஞ்சென்ற மகாலிங்கம், காலஞ்சென்ற மகேஸ்வரி, கணேசலிங்கம்(சுவிஸ்), தருமலிங்கம்(ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வரத்தினம்(புத்தூர்) அவர்களின் சிறியதந்தையும் செல்வராஜா(புத்தூர்), தவலிங்கம், பரமேஸ்வரி(கொழும்பு), சசிகலா, ரதி, ஞானமூர்த்தி(குமார்), வத்சலா(சுவிஸ்), ரூபினி(ஜேர்மனி) ஆகியோரின் அருமை மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2000) வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியை உடுப்பிட்டி இந்து மயானத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
தவராசா (லச்சு),
*மகன்.*

*இமையாணன் மேற்கு,*
*துவாளி வீதி,*
*உடுப்பிட்டி.*

(C/14514)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.12.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.